...நகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 மாசி 09 திங்கட்கிழமை (21.02.2011) பக்கங்கள் 12 +IV ஓசை – 144

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்
SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
IATA

(C/421)
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

# பிரபாகரனின் தாயார் நேற்று காலமானார்

(வல்வெட்டித்துறை)

புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் தனது 81 வது வயதில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.10 மணியளவில் வல்வெட்டித்துறை மருத்துவமனையில் காலமானார்.

நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் கடந்த இருவாரங்களாக தனது நினைவுகளை இழந்து தீவிர சிகிச்சைக்கும் மருத்துவப் பராமரிப்பிற்கும் உட்பட்டிருந்த நிலையிலேயே நேற்றுக் காலை காலமானதாக அறிவிக்கப்பட்டது.

பார்வதி அம்மாளின் இறுதிக் கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. செவ்வாய்க்கிழமை காலை வரை பொதுமக்கள் அஞ்சலிக்காக




பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11 மணிக்கு வல்வெட்டித்துறை ஆலடி ஒழுங்கையிலுள்ள அவரது மகளின் வீட்டில் பூதவுடல் வைக்கப்பட்டு பின்னர் அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு இறுதி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு வல்வெட்டித்துறை ஊரணி பொது மயானத்தில் பூதவுடன் தகனம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.தற்போது ஊரணி வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருக்கும் பூதவுடலுக்கு பெருமளவு பொதுமக்கள் நேரில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். வல்வெட்டித்துறையில் இவரது மறைவையொட்டி கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன. இதேவேளை வல்வெட்டித்துறையில் பார்வதி

(11 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தில் பெற்ற வெற்றியை இழந்து விடாமல் பாதுகாப்போம்



(கொழும்பு)

**புலிகளுக்கெதிரான யுத்தத்தில் அரசு பெற்றுக் கொண்ட வெற்றியை அனைவரும் ஒன்றிணைந்து பாதுகாக்கவேண்டியது மிகவும் அவசியம் என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் புலிகளுக்கு எதிராக ஈட்டப்பட்ட வெற்றியை பாதுகாக்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இராணுவ ரீதியாக புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும், உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் புலிகளுக்கு தொடர்ந்தும் ஆதரவளித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாதிப்பினை ஏற்படுத்த சில சக்திகள் முனைப்புக்காட்டி (11 ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் மீனவர்கள் விடுதலை; அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கடற்தொழிலுக்குச் சென்ற சமயம் இந்திய கடற்தொழிலாளர்களால் பிடித்துச்செல்லப்பட்ட குருநகர் மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது நடவடிக்கைகளையடுத்து தமிழ்நாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மேற்படி குருநகரைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் இன்னும் ஓரிரு தினங்களில் யாழ்ப்பாணம் வந்தடைவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, தமிழ்நாட்டைச் சேர்ந்த நாகை, புதுக்கோட்டை மற்றும் காரைக்கால் போன்ற பகுதிகளைச் சேர்ந்த கடற்தொழிலாளர்கள் இலங்கை கடல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடற்தொழிலில் ஈடுபடுவதில்லை எனத் தீர்மானித்துள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் அதிகாரி திடீர் மரணம்; கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(நெல்லியடி)

கனகராயன் குளம் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையக் கிணற்றில் இருந்து பொலிஸ் அதிகாரியொருவர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் குறித்த பிரதேசத்தில் தண்ணீர் விநியோகிக்கும் பொறுப்பதிகாரியாக கடமையாற்றும் சரத் என்பவரே உயிரிழந்தவராவார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## காணி உறுதிகளில் கைரேகை; வரப்போகிறது புதிய சட்டம்

(கொழும்பு)

காணித்துண்டுகளின் உரிமம் கைமாறும் போது அதற்கான காணி உறுதிகளில் கைவிரல் அடையாளங்களைப்பதிவு செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

காணி உறுதிகளில் கை விரல் அடையாளத்தை பதிவு செய்யும் முறையை அரசு மிக விரைவில் அறிமுகம் செய்ய உள்ளது.காணி வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸி.நோக்கி கடல்பயணம்; 17 பேர் கடலில் கைது

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவை நோக்கி சட்டவிரோதமான முறையில் படகொன்றில் சென்ற 17 இலங்கையர்கள் இலங்கைக் கடற்படையி னரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அம்பாந்தோட்டைக்கு தெற்கே 20 கடல் மைல் தொலைவில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படைப் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார். கடுவெல மற்றும் மிரிஸ்ஸ பகுதிகளைச் சேர்ந்த இம்மீனவர்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கு அரசியல் மறுவாழ்வு; ஐ.தே.க.வுடன் இணைவதற்கு பேரம்



(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியில் இணைத்துக்கொள்வது தொடர்பாக உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகள் சரத்பொன்சேகா பிரிவினருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் கசிந்துள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சிக்குள் உயரிய பதவியொன்று வழங்கப்படுமாயின் சரத் (11 ஆம் பக்கம் பார்க்க)

## வேட்புமனு நிராகரிப்புக்கு எதிராக வழக்கு; 60 மன்றங்களுக்கான தேர்தல் ஒத்திவைப்பு

உள்ளூராட்சி மன்றத்தேர்தல் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், 60 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை தேர்தல்கள் ஆணையாளர் ஒத்திவைத்துள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

நிலுவையில் உள்ள சட்டச் சிக்கல்கள் காரணமாக 60 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் மார்ச் 17 ஆம் திகதி நடைபெறாது என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. (11 ஆம் பக்கம் பார்க்க)

**மாணவச்செல்வங்களே...**

**உள்ளே... கல்விமுரசு**

- **தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை -2011 பகுதி I வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது**
- **விற்பனை முகவரிடம் கேட்டுவாங்குங்கள்.**

# ஆனையிறவு உப்பள உற்பத்தி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது



(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு உப்பளத்தில் உப்பு உற்பத்தி நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல வருடங்களாக செயலிழந்து போயிருந்த உப்பளத்தில் முன்னர் வருடத்திற்கு 79 ஆயிரம் 80 வரையிலான மெட்ரிக் தொன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

தற்போது, அம்பாந்தோட்டை புந்தல, பலட்டுப்பான மற்றும் புத்தளம் ஆகிய இடங்களில் உப்பு உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனையிறவு உப்பள நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இறக்குமதி செய்யப்படும் சோடியம் குளோரைட் உப்பின் இறக்குமதியை மட்டுப்படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதன்மூலம் கணிசமான அந்நியச் செலாவணியினைச் சேமிக்க முடியும் என வர்த்தக சமூகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தற்போது 60 சதவீதமான உப்பு இலங்கையில் உற்பத்தியாகும் அதேவேளை, 40 சதவீதமான உப்பினை இறக்குமதி செய்ய வருடாந்தம் அரசு 38 கோடி ரூபா அந்நியச் செலாவணி செலவாவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோஷ்டி மோதல்; இளைஞர் படுகாயம்

(கொழும்புத்துறை)

பகிடிவதையில் தொடங்கி கோஷ்டி மோதலாகி மண்டை உடைந்த நிலையில் யாழ்.மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த 22 வயதுடைய நவநீதன் என்பவர் யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மேற்படி சுண்டிக்குளி மறுகுளத்தைச் சேர்ந்த இளைஞர்களை மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த இளைஞர்கள் பகிடிவதை மற்றும் கெட்ட வார்த்தைகளால் பேசியதாகவும் கூறப்படுகிறது. பல நாட்களாக வீதியில் ஏற்பட்ட இப்பிரச்சினை நேற்றைய தினம் 1.30 மணியளவில் இரு குழுக்களுக்குமிடையில் கை கலப்பாகிய நிலையில் மறுகுளத்தைச் சேர்ந்த இளைஞர்களால் நவநீதன் என்னும் இளைஞனுக்கு கொட்டனால் அடித்துத் தலையில் பலத்த காயம் ஏற்பட்டதுடன், அயலவர்கள் அந்நபரை வைத்தியசாலையில் அனுமதித்ததுடன், சுண்டிக்குளி இராணுவ முகாமிற்கு அயலவர்களால் அறிவிக்கப்பட்டது. அயலில் நின்ற இராணுவத்தினர் விரைந்து வந்து குழுக்களின் பிரச்சினையை உணர்ந்து யாழ். பொலிஸ் நிலையத்திற்கு தகவல் அளித்தனர். அங்கு விரைந்து வந்த பொலிஸார் விசாரணைக்காக மறுகுளத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களை பொலிஸ நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். (52)


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (R017)


# றோயல் முன்பள்ளிக்கு புதிய கட்டடம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரம் பிரதான வீதியில் அமைந்துள்ள றோயல் முன்பள்ளிக் கட்டடம், விளையாட்டுத்திடல் திறப்பு விழா மற்றும் புதுமுக மாணவர்களுக்கான கால்கோள்விழா என்பன கடந்த வாரம் சிறப்பாக நடைபெற்றது.

இந்தநிகழ்வில், கௌரவ விருந்தினர்கள் , மதகுருமார்கள், கல்வி அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளிகளுக்கான ஓய்வுபெற்ற நிர்வாகப் பொறுப்பாளர் செல்வராசாவுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதுடன் முன்பள்ளி மாணவர்களின் க லை நிகழ்வுகளும் இடம்பெற்றது. (77)

# "எங்கள் மீனவர்களையும் விடுவியுங்கள்"

# சிலாபம் மீனவக் குடும்பங்கள் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுதலை செய்ய வேண்டுமெனக் கோரி இலங்கையின் மேற்கே, சிலாபத்தில் மீனவர்களின் உறவினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது உறவுகள் விடுதலையடைந்து நாடு திரும்ப வேண்டுமென இறைவழிபாட்டில் ஈடுபட்ட மீனவர் குடும்பங்கள், இலங்கையில் இந்திய மீனவர்களுக்கு விடுதலை அளிக்கப்பட்டதைப் போலவே இலங்கை மீனவர்களும் விடுவிக்கப்பட வேண்டுமென கேட்டுக்கொண்டனர்.

நூற்றுக்கணக்கில் பிடிபட்ட இந்திய மீனவர்கள் மூன்று நாட்களுக்குள் விடுவிக்கப்பட்ட நிலையில் தமது மீனவர்கள் பிடிபட்டு 65 நாட்களாகியும் அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லையென மீனவர்களின் உறவினர்கள் விசனம் தெரிவித்தனர்.

இரண்டு நாடுகளின் மீனவர்கள் தொடர்பில் அரசாங்கங்கள் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டிருக்க முடியாது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர் குடும்பங்கள் சுட்டிக்காட்டின.

எனவே,இந்திய மீனவர்கள் 136 பேரை இலங்கை விடுவித்தது. இலங்கை அரசாங்கத்தின் நல்லெண்ண வெளிப்பாடாக இந்திய மீனவர் விடுதலையைக் கருதி, தடுத்துவைக்கப்பட்டுள்ள தமது கணவர்மார் மற்றும் பிள்ளைகளை இந்திய அதிகாரிகள் விடுவிக்க முன்வரவேண்டும் என சிலாபத்தைச் சேர்ந்த மீனவர் குடும்பத் தலைவிகள் கோரினர்.

தனது கணவர் மற்றும் மகன் பிடிபட்டு இரண்டு மாதங்கள் கடந்துள்ள போதிலும் அவர்களை விடுவித்து நாட்டுக்கு அழைத்துவர அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லையென சிலாபத்திலுள்ள சகுந்தலா என்ற பெண் தமிழோசையிடம் கூறினார்.

இந்தியாவில் இலங்கை மீனவர்கள் 94 பேருக்கு பிணை வழங்கப்பட்டுள்ள போதிலும், அவர்கள் நாடுதிரும்ப முடியாது தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்தியாவில் விடுதலையாகியுள்ள 21 பேரும் நான்கு படகுகளும் ஞாயிற்றுக்கிழமை காங்கேசன்துறை ஊடாக இலங்கை வந்தடையவுள்ளதாக மீன்பிடிவள திணைக்களத்தின் உதவி அத்தியட்சகர், லால் டி சில்வா பிபிசியிடம் தெரிவித்தார்.

இதுதவிர இலங்கை மீனவர்கள் இன்னும் ஆறுபேர் இந்தியாவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, இலங்கையின் வடக்கு கடற்பகுதியில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள், தாம் இலங்கை மீனவர்களால் அச்சுறுத்தப்பட்டு கடலிலிருந்து கரைக்கு கொண்டு செல்லப்பட்டதாக கூறினர்.

# மெலிஞ்சிமுனை மக்கள் நலன் கருதி

# தனியார் பேருந்து சேவை ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை-மெலிஞ்சிமுனைக் கிராமப் பகுதிக்கு இன்று முதல் தனியார் போக்குவரத்து சிற்றூர்தி சங்கத்தினால் பேருந்து சேவை நடைபெறவுள்ளது.

மேற்படி மெலிஞ்சிமுனைக் கிராமத்துக்கான பேருந்து சேவை கடந்த பதினைந்து வருடங்களாக நடைபெறாமல் இருந்து வந்தது. இதனால் இப்பகுதி மக்கள் கால்நடையாகவும், துவிச்சக்கர வண்டிகளிலுமே பல மைல் தூரத்தினைக் கடந்து ஊர்காவற்றுறை நகரப் பகுதிக்கு வருகை தந்து அன்றாட தேவைகளை நிறைவேற்றி வந்ததுடன், நோயாளர்கள் பெருஞ்சிரமத்திற்கு மத்தியில் வைத்தியசாலைக்கு பல மைல் தூரம் கடந்து வரும் துரதிர்ஷ்டமான நிலை காணப்படுவதுடன், பாடசாலை மாணவர்களும் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே தமது பாடசாலைகளுக்குச் சென்றுவர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்பட்டு வந்தது.

மேற்படி நிலை தொடர்பாக மெலிஞ்சிமுனைக் கிராம மக்கள், பொதுஅமைப்புக்கள், நலன்விரும்பிகள் ஒன்றிணைந்து தமது கிராமத்துக்கான பேருந்து சேவையை மேற்கொள்வதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் எனப் பல தடவைகள் கோரிக்கை மேற்கொண்டு வந்த நிலையில், தற்போது இன்று முதல் இப்பேருந்து சேவை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மெலிஞ்சிமுனைக் கிராம மக்களின் கோரிக்கை ஊர்காவற்றுறை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிப் பொறுப்பாளர் எம்.காந்தன் அவர்களால் மாவட்டப் பொறுப்பாளர் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதன் காரணமாக அமைச்சரின் முயற்சியினால் மேற்படி கிராமத்துக்கான பேருந்து சேவையினை ஊர்காவற்றுறை தனியார் போக்குவரத்து சிற்றூர்த்திச் சங்கத்தின் மூலம் இன்று முதல் இருதடவைகள் பேருந்து சேவையினை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள், நோயாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு காலை 7.45 மணிக்கும், மதியம் 2.30 மணிக்கும் இப்பேருந்து சேவைகள் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (27)


நல்லூர் சரவணா ரெக்ஸ்

எமது வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கு இணங்க மலிவு விற்பனை மேலும் ஏழு நாட்கள் நீடிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய சாறிகள்

மாபெரும் மலிவு விற்பனை

♦பட்டுச்சாறிகள் ♦சில்க்ஸ் சாறிகள் ♦பஞ்சாபிகள் ♦கொட்டன் சாறிகள் ♦பஞ்சாபித் துணிகள்

ஏராளம்! ஏராளம்!

அலை அலையாக வாரீர் !!

காலம்:- 21.02.2011 - 27.02.2011 வரை.

இடம்:-நல்லூர் பூங்கனிச்சோலைக்கு முன்பாக (முடமாவடி)

நேரம்:- காலை 9.30 மணிமுதல் இரவு-8.30 மணிவரை.

அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!!

எங்குமே காணாத அதி சிறப்புத் தள்ளுபடி

வாடிக்கையாளர் நலன்கருதி பிரத்தியேகமான இடம்

C/505



மக்கள் வேண்டுமென்றே மிருகத்தன்மையை வளர்த்துக் கொண்டு வாழ்க்கையில் உயரிய கொள்கைகளை உதறித் தள்ளிவிட்டதால்தான் உலகத்தில் துன்பம் மலிந்து வருகிறது.

- சர் ரிச்சர்டு கிரிகிரி -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## சிறுவர்களும் நலன்களும்

இன்றைய சிறுவர்கள் நாட்டின் எதிர்கால சிற்பிகள். அவர்களை ஒழுக்கசீலர்களாக வளர்த்தெடுக்கவேண்டியது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

இவர்கள் தாம் வாழும் காலத்தில் பலவிதமான இன்னல்களுக்கு முகம்கொடுத்து அவற்றின் கோரப் பிடிக்குள் சிக்கி பலவிதமான கஷ்டங்களை அனுபவித்து வருவதைத் தினமும் காண்கிறோம்.

கடந்த காலங்களில் உள்நாட்டில் இடம்பெற்ற இடப்பெயர்வுகளும், கோர யுத்தமும், இயற்கை அழிவுகளும் சிறுவர்களை வெகுவாகப் பாதித்திருந்தமையை யாவரும் அறிவர்.

சிறுவர்களின் இந்நிலைக்கு நாம் யாரையும் குற்றம் சுமத்தவோ, காரணமானவர்கள் யார் என்பதையோ காணமுயல்வயது இப்பத்தியின் நோக்கமல்ல.

இடப்பெயர்வுகளினால் நிரந்தர வாழ்விட வசதிகளின்றி வெய்யிலில் காய்ந்தும், மழையினால் நனைந்தும் முகாம் வாழ்க்கை வாழ்ந்த குடும்பங்களின் சிறுவர்கள் பட்ட, பட்டுக்கொண்டிருக்கும் அவஸ்தைகள் கொஞ்சநஞ்சமல்ல.

உணவு, உடை, உறையுள், சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படைத் தேவைகள், வசதிகளின்றி இவர்கள் பட்ட கஷ்டங்கள் கணக்கிடலங்காது.

வன்னியில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின்போது பாதிக்கப்பட்டு பெற்றோரை, உறவினர்களை இழந்து அநாதரவாக விடப்பட்ட எத்தனையோ சிறுவர்களை மனிதநேயம் கொண்டவர்கள் பொறுப்பெடுத்து பராமரித்தும் வருகிறார்கள்.

இந்தச் சிறுவர்களின் விடயத்தில் இப்போதுதான் அரசு கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தகைய கவனம் காலங்கடந்ததாக இருந்தாலும், வெறும் பேச்சளவில் மட்டும் இல்லாமல் அதற்கு செயல்வடிவம் கொடுப்பதில்தான் எல்லாம் தங்கியுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடபகுதியைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் சிறுவர்களை பொறுப்பேற்று பராமரிப்பதற்கும், அதுவும் புலிகளினால் பராமரிக்கப்பட்டு வந்த செஞ்சோலைச் சிறுவர்களையும் இதில் சேர்த்துக்கொள்ளப்படவிருப்பதும் வரவேற்கக்கூடிய விடயமாகும்.

இதற்கென தனியார் சிறுவர் பராமரிப்பு இல்லங்களின் விபரங்களைத் திரட்டும் பணியும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசு ஆரம்பிக்கவுள்ள இத்திட்டத்திற்கு முன்பாக சிறுவர் உலகு ஒளிபெற எல்லோரும் சக்தி கொடுங்கள் என்று மகுடவாக்கியத்துடன் அரச அதிபர் தலைமையில் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு ஒன்று யாழ். மாவட்ட செயலகத்தில் இயங்கி வருகிறது. இந்தக் குழு கிராம மட்டத்தில் இருந்து அமைக்கப்பட்டு, பிரதேச மட்டம், மாவட்ட மட்டமென வியாபித்துள்ளது.

எனினும் இக்குழு திருப்திகரமான முறையில் செயற்படுவதாகத் தெரியவில்லை. அவர்கள் வெறுமனே துண்டுப்பிரசுரங்கள் மூலம் தகவல்களை மட்டும் வெளியிட்டு வந்துள்ளதுடன், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவில்லை.

சிறுவர்களது உரிமைகள் மறுக்கப்படும்போதும், அவர்களது தேவைகள் பூர்த்திசெய்யப்படாத போதும், பாலியல் ரீதியான பிரச்சினைகளுக்கெல்லாம் ஆளாகும்போதுகூட இவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் பெற்றோர்கள், பாதுகாவலர்களை இழந்த சிறுவர்களின் பராமரிப்பு இன்று அவசிய தேவையாக உள்ளது. இவர்களின் மறுவாழ்வுக்கு அரசு வகுக்கும் திட்டத்தில் சிறுவர்களைப் பராமரிக்கவென பதிவுசெய்யப்பட்டு இயங்கும் நிறுவனங்களையும் பங்காளியாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இவர்கள் விடயத்தில் அனைத்துத் தரப்பினரும் இணைந்து செயற்படும்போதுதான் அவர்களது சீரான மறுவாழ்வை அளிக்கமுடியும் என்பதே எமது கருத்தாகும்.

-ஆசிரியர்-

# இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளை விரைவில் தரமுயர்த்தப்படவுள்ளது

## இலங்கை வங்கித் தலைவர் தெரிவிப்பு



(அச்சுவேலி)

இலங்கை வங்கி அச்சுவேலிக கிளை விரைவில் தரமுயர்த்தப்படவுள்ளதாக இலங்கை வங்கியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் நடைபெற்ற விவசாய சம்மேளனம் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனை அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் நான் அச்சுவேலிக்கு வந்த போது அச்சுவேலிக் கிளையானது சாதாரண சேவையைச் செய்து கொண்டிருந்தது. இன்று இலங்கையில் உள்ள எந்த வங்கியும் செய்யாத சாதனையை அச்சுவேலி இலங்கை வங்கி செய்திருக்கின்றது அதற்குக் காரணம் அதன் முகாமையாளரும் அந்த வங்கியின் வாடிக்கையாளருமே ஆவர். இவ்வளவு காலமும் விரிவாக்கல் கிளையாக இருந்த அதாவது 'சி' தரத்தில் இருந்த இந்த வங்கி விரைவில் 'டி' தரத்திற்கு தரமுயர்த்தப்படவுள்ளது.

இந்த அச்சுவேலிக் கிளையானது 700 மில்லியன் ரூபாயை கடனாக வழங்கியுள்ளது. இது மட்டுமல்ல வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்கல் மற்றும் கடனை மீளபபெறல் போன்றவற்றிறகாக இதன் முகாமையாளர், மத்திய வங்கி ஆளுநர் அண்மையில் கௌரவிக்கப்பட்டதையும் இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இனிவரும் காலங்களில் அச்சுவேலிக் கிளையினூடாக பெருந்தொகையான கடன்களை மக்களுக்கு வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். தென்னிந்தியாவில் உள்ள விவசாயிகள் மழையில்லாத காலத்தில் தங்களின் முயற்சியால் விவசாயத்தை மேற்கொண்டு பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றார்கள். அவர்களைப் போன்று இங்குள்ள விவசாயிகளும் தங்களின் முயற்சியால் பொருளாதாரத்தில் தன்னிறைவைக் காணவேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளை முகாமையாளர் புவனேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினர்கள் மங்கள வாத்தியங்களுடன் அழைத்து வரப்பட்டு சிவன் ஆலயத்தில் பூசை வழிபாடுகளின் பின்னர் மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிகழ்வில் அச்சுவேலிப் பிரதேசத்திற்குட்பட்ட விவசாய சம்மேளனத்தலைவர்களை இலங்கை வங்கித் தலைவர் கௌரவித்தார். அததுடன் வாழ்வாதாரக்கடன் திட்டங்களையும் தலைவர் வழங்கினார். தொடர்ந்து இலங்கை வங்கியின் தலை வருக்கு பல்வேறு தரப்பினரும் பொன்னாடை அணிவித்ததுடன் நினைவுச் சின்னங்களையும் வழங்கினார்கள். இந்த நிகழ்வில் பெருமளவான மக்கள் மற்றும் வங்கிசார் ஊழியர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (க)

## விளையாட்டுப் போட்டி

(கொழும்புத்துறை)

யாழ். சென் ஜேம்ஸ். மகளிர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று (21.02.2011) பி.ப 2 மணிக்கு பாடசாலை அதிபர் எல்.மகேஸ்வரன் தலைமையில் பாடசாலை வளாக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், மற்றும் சிறப்பு விருந்தினராக யாழ். ஆயர் இல்லத்தைச் சேர்ந்த அருட்தந்தை ஜே.பி.அந்தோனி அடிகள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (52)

## கனகராயன்குளம்பகுதி வீடொன்றில் இரவுவேளை உட்புகுந்த பொலிஸ்

(நெல்லியடி)

கனகராயன்குளம் பகுதியிலுள்ள வீடொன்றில் அங்கு இருந்தவர்களிடம் பொலிஸ் உறுப்பினர் ஒருவர் மதுபோதையில் தகாத முறையில் நடக்க முற்பட்ட சம்பவம் ஒன்று நேற்று (20.02.2011) அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

வீட்டுக்காரர் அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயம் குறித்த நபர் வீட்டுக்குள் நுழைந்து கதவைத் திறந்து அருகில் நித்திரையில் இருந்த 70 வயது மூதாட்டிக்கு அருகில் உட்கார்ந்திருந்த போது மற்றைய அறையில் உறக்கத்தில் இருந்த குடும்பத்தலைவி விழித்துப் பார்த்தவேளை தனது தம்பி என நினைதது்ப் பெயரைச் சொல்லி அழைத்த போது அவர் வரவில்லை. இதனை அடுத்து அவர் தனது தம்பி இல்லை எனக் கண்டறிந்து கணவனிடம் கூறி கூக்குரலிட்ட வேளை குறித்த நபர் ஓட முற்பட்டார்.

அந்தச் சமயம் அங்கிருந்தவர்கள் அவரைத் துரத்திப் பிடித்தனர். அப்பொழுது அவர் தான் இராணுவம், பொலிஸ் என மாறிமாறிக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவரது கூற்றில் சந்தேகமடைந்த இவர்கள் 561 ஆவது சிவில் பாதுகாப்பு படைப்பிரிவினருக்கு அறிவித்தனர். அவர்கள் குறித்த இடத்திற்கு வந்து சந்தேக நபரை விசாரணை மேற்கொண்ட வேளை குறித்த நபர் தான் பொலிஸ் எனக் கூறியதுடன் மது அருந்தியதால் வீதிமாறி வீட்டுக்குள் வந்துவிட்டதாகக் கூறினார்.

இதனை அடுத்து படைப்பிரிவினர் அவரை கனகராயன்குள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கனகராயன்குளம் பிரதேசத்தில் தற்போது நெல் அறுவடை இடம்பெற்று வருகிற நிலையில் ஆண்கள் வயலுக்குச் செல்வதால் பெண்களே தனியாக வீட்டில் வசிக்கின்றனர். எனவே இவ்வாறான சம்பவங்களால் தாம் அச்சத்துடன் வாழ வேண்டி உள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர். (12)

## விரைவில் மற்றொரு படகுச் சேவை

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவு - குறிகட்டுவானுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்துப் படகு அடுத்த வாரமளவில் சேவையில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படகு கடந்த சில தினங்களாக திருத்த வேலைகளுக்காக ஊர்காவற்துறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போது இந்தப் படகு திருத்தவேலைகள் முடிவடைந்துள்ளதாகவும் இயந்திரங்களைப் பழுதுபார்க்கும் வேலைகள் மட்டும் காணப்படுவதனால் அவற்றைப் பார்த்துத் திருத்திய பின்னர் படகு சேவையில் ஈடுபடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (14)

## போட்டிப்பரீட்சையைப் பிற்போடவும் அரசாங்க ஊழியர் சங்கம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள முகாமை உதவியாளர் சேவையின் அதிவிசேட வகுப்பிற்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையை குறைந்தது இரண்டு மாதங்களுக்குப் பிற்போடுமாறு வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அவ்வேண்டுகோளில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மட்டக்களப்பு அனைத்துப் பகுதிகளும் கடுமையாகவும் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் பல பகுதிகள் வெள்ளப் பெருக்கால் பாதிப்புற்று, இயல்பு வாழ்க்கையில் பின்னடைவு ஏற்பட்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இப்பரீட்சை நடாத்தப்படுவதால் பல அலுவலர்கள் பாதிப்பை எதிர்நோக்குகின்ற சந்தர்ப்பங்கள் அதிகமாகவுள்ளது என்பதுடன் இங்கு பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அத்தியாவசிய தேவைகளின் நிமித்தம் அங்குள்ள அரசசேவையாளர்களும் கடுமையாகச் சேவையாற்ற வேண்டிய நிலைகளில் பரீட்சைக்காகத் தயார்ப்படுத்துவதில் சிரமங்களும் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# கடந்த காலங்களில் அரசியல் தலைவர்கள் விட்ட தவறுகளே இன்றைய நிலைக்குக் காரணம்

(யாழ்.நிருபர்)

கடந்தகால அரசியல் தலைமைகள் விட்ட தவறுகளே தமிழ் மக்களின் இடப்பெயர்வுகள் துன்ப துயரங்களுக்குக் காரணமாகும். தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கியவர்கள் தமது தலைமைத்துவத்தைச் சுய இலாபங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

இவ்வாறு கோண்டாவில் இராம கிருஷ்ணா மகாவித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் ச.வாமதேவன் தலைமையில் நேற்று நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

இப்பாடசாலையின் தேவைகள் அடங்கிய பத்துக் கோரிக்கைகளை அதிபர் முன்வைத்திருக்கின்றார். அவற்றுள் ஆறு கோரிக்கைகளை என்னால் நிறைவேற்றித்தர முடியும்.

இந்தப் பாடசாலையில் இரண்டு மாடிக கட்டடத்தின் அடித்தளத்தை அமைத்துத் தருமாறு அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார். அதற்கிணங்க கீழ்த்தளத்தை அமைப்பதற்கு 80 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கித் தருவதாகவும், மாகாண கல்வித் திணைக்களப் பொறியியலாளரின் மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததும் இரண்டு வாரங்களில் கட்டட வேலைகளை ஆரம்பிக்க முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.


மேலும் ஒரு போட்டோக் கொப்பி இயந்திரம், 10 கணினிகள், நூலகத் தளபாடங்கள் போன்றவற்றையும் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

இன்று நாட்டில் ஆங்காங்கே மழைவிட்டும் தூவானம் ஓயவில்லை என்பது போல சிறுசிறு சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இவை தனிப்பட்ட குரோதம், விருப்புவெறுப்பு என்பனவற்றின் அடிப்படையிலேயே நடைபெறுகின்றன. மக்களின் ஒத்துழைப்புடன் வெகு விரைவில் இத்தகைய நிகழ்வுகள் இல்லாதொழிக்கப்படும்.

பேச்சுச் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம், தொழில் செய்யும் சுதந்திரம் என்பன மக்களின் அடிப்படை உரிமைகள். இவற்றை யாரும் எம்மிடமிருந்து பறித்துவிட முடியாது.

அழுதும் பிள்ளை அவளேதான் பெற வேண்டும் என்பது போல எமக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி கிடைக்கக் கூடிய உரிமைகள், உதவிகளை வைத்துக்கொண்டு அவற்றில் இருந்து தொடர்ந்து முன்னேற வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர்.



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் பரிசில்களை வழங்கினர். (10)

# ஆசிரியர்கள் ஒன்றுகூடல்

(யாழ்.நிருபர்)

அகில இலங்கை ரீதியில் ஆசிரியர்கள் ஒன்றுகூடும் அங்குரார்ப்பண வைபவம் இன்று காலை 9 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கல்வியமைச்சு ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வினை வடமாகாண கல்வித் திணைக்களம் நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (மி)

# விவசாய உபகரணங்கள் இன்றி இடம்பெயர்ந்த மக்கள் பாதிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்கு விவசாய சம்மேளனத்தின் செயற்பாடுகள் திருப்திகரமானதாக அமைந்திருக்கவில்லை என பாதிக்கப்பட்ட விவசாயிகள் மிகவும் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சம்மேளனம், விவசாயிகளின தேவைகளை அறிந்து அதற்கேற்றாற் போல் செயற்படுவதிலிருந்து தவறியிருப்பதாகவும், நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் கிருமிநாசினி, தெளிகருவிகள் போன்றவற்றை உரிய சலுகை முறையில் பெற்றுக் கொடுக்கவில்லை எனவும் பல விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த விவசாயிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதனால் அவர்கள் தமது வாழ்வாதாரப் பிரச்சினைக்குக் கூடத் தீர்வு காணமுடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

## விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம், கந்தரோடைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மு.ப. 11 மணிக்கு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் நேருக்குநேர் மோதியமையாலேயே இவ்விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த ஏ.குணசிங்கம் என்பவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (மி)

# விஞ்ஞான பாடத்தில் வீழ்ச்சி; மாற்றி அமைக்க நடவடிக்கை

(அச்சுவேலி)

யாழ். கல்விவலயத்தின் கீழ் உள்ள கோப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளில் கடந்த காலங்களில் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் விஞ்ஞானப் பாடத்திட்டத்தின் பெறுபேற்றில் ஏற்பட்ட வீழ்ச்சி நிலையை மாற்றியமைத்து பெறுபேற்றில் உயர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் செயற்றிட்டம் ஒன்றை உருவாக்கி நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

செய்முறைச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது தொடர்பாக கோப்பாய் கோட்ட விஞ்ஞான ஆசிரியர்கள் ஒன்றிணைந்து கலந்துரையாடுவதன் மூலம் இப்புதிய செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளதாகவும் இதில் செய்முறைச் செயற்பாடுகளை உள்ளடக்கிய வேலைத திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (03)

# மழை காரணமாக சேவைக்குவராத அலுவலர்களுக்கு விசேட விடுமுறை வழங்கவும்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக சேவைக்குவராத அலுவர்களுக்கு விசேட விடுமுறை வழங்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தா சங்கம் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆளுநரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த வாரங்களில் அதிக மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் தமது பணித்தளங்களுக்குச் செல்ல முடியாத சூழ்நிலைமைகள் அலுவலர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அலுவலர்களின் அப்பாற்பட்ட காரணங்களினால், அவர்கள் கடமைக்குச் சமூகமளிக்க முடியாத நிலைமைகள் ஏற்பட்டுள்ளதைக் கருத்திற்கொண்டு, 11/2010 இலக்க 30.06.2010 திகதியிடப்பட்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையில் குறித்த நிபந்தனைகளின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட அலுவலர்களுக்கு விசேட விடுமுறை அனுமதி வழங்க வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை முன்வைக்கிறோம். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அலுவலர்கள் மிகவிரைவாக இயல்பு நிலைமையடைவதற்கு ஏதுவாக 10/2010 இலக்க 20.08. 2010 திகதிய பொதுநிர்வாகச் சுற்றறிக்கையில் குறிக்கப்பட்ட முற்பணம் ஒன்றை வழங்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தாங்கள் இவ்விடயத்தில் சாதமான முறையில் தீர்மானத்தை மேற்கொண்டு எமக்கும் அறிவித்து உதவுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பட்டப்பகலில் தாலிக்கொடியை அறுத்த திருடன் தப்பியோட்டம்!

## ஆனைக்கோட்டையில் சம்பவம்

(அச்சுவேலி)

ஆனைக்கோட்டை, உயரப்புலம் அடைக்கலநாயகி வீதியில் சென்று கொண்டிருந்த பெண்ணொருவர் அணிந்திருந்த தாலிக்கொடியை பட்டப்பகலில் அறுத்துக்கொண்டு ஓடிய சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

நேற்றுமுன்தினம் பி.ப.2.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது-

பேருந்தில் இருந்து இறங்கிய பெண்ணொருவர் வீதி வழியாக வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த வேளை, அவ்வீதியால் வந்த நபரொருவர் குறித்த பெண்ணின் தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு ஓடியபோது, அப்பெண் கூக்குரலிட்டதைத் தொடர்ந்து பொதுமக்கள் கூடித் திருடனைப் பிடிப்பதற்குள் தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.










ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் நடைபெற்ற விவசாய சம்மேளனம் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வின்போது, விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், இலங்கை வங்கித் தலைவர் மங்கள விளக்கேற்றுவதையும் கலைமதி இலங்கை வங்கி எழுச்சிக் கிராமத்தின் சார்பில் வங்கித்தலைவர் அவர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்குவதையும், வாடிக்கையாளர் ஒருவருக்கு குத்தகை அடிப்படையில் வாகனம் ஒன்று வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (க)

# சுற்று நிருபத்துக்கு முரணாகப்பெற்ற பணத்தை பெற்றோரிடம் திருப்பி ஒப்படைக்கப் பணிப்புரை

## வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

2011 ஆம் ஆண்டு தரம் 1, 5,6 ஆம் வகுப்புகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்குப் பெருந்தொகைப் பணத்தை நன்கொடையென்ற பெயரால் பாடசாலை அதிபர்கள் அறவிட்டுள்ளனர்.

இது கல்வியமைச்சின் மாணவர்களின் பாடசாலை அனுமதி தொடர்பான சுற்றுநிருபத்திற்கு முற்றிலும் முரணானது. அவ்வாறு பெருந்தொகைப் பணததை அறவீடு செய்த அதிபர்கள், அப்பணத்தை உடனடியாகப் பெற்றோர்களிடம் திருப்பிக் கொடுத்திட வேண்டும் என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் அதிபர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

இந்த வருட அனுமதிக்காக வலிகாமம் கல்வி வலயத்தின் மானிப்பாய் பிரதேசத்திலுள்ள பிரபல்யமான பாடசாலைகள் தங்கள் பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக ரூபா 10,000 முதல் ரூபா 50,000 வரை நன்கொடையென்ற பெயரால் பெற்றோர்களிடமிருந்து அறவீடு செய்துள்ளன.

பணம் கட்ட மறுத்தவர்களுக்குப் பாடசாலை அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெற்றோர்கள் தங்களை வெளிக்காட்டிக் கொண்டால் வேறு பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளுக்கு அனுமதி பெறமுடியாது போய்விடும் என்ற காரணத்தால், வலயப் பணிப்பாளரிடம் நேரடியாகச் சென்று முறைப்பாடு செய்யாது, கடிதம்மூலம் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்தே அதிபர்கள் கூட்டத்தில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் இந்த அறிவித்தலைப் பணிப்புரையாக அதிபர்களுக்கு விடுத்துள்ளார். (06)



யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மாணவ மாணவிகள் 10 பேருக்கு ஆளுநர் வாசஸ்தலத்தில் துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்புச் செய்யப்படுவதைக் காணலாம். (19)

# புவனேஸ்வரி அம்மன் ஆலய ஐம்பொன் விக்கிரகம் திருட்டு

(தெல்லிப்பளை)

மாவிட்டபுரம் புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் ஐம்பொன்னாலான அம்மன் விக்கிரகம் கடந்த திங்கட்கிழமை இரவு திருட்டுப் போயுளளதாக ஆலய பூசகரும், உரிமையாளரும் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

வலி.வடக்கு இடம்பெயர்வின் பின்னர் நீண்ட காலமாகப் புவனேஸ்வரி அம்மன் ஆலயம் வழிபாடுகளின்றி இருந்தது.

அண்மையில் இப்பகுதியில் மீள்குடியேற றததிற்கு அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, ஆலயத்தில் நித்திய பூசை நிகழ்த துவதற்கு இராணுவத்தினர் அனுமதியளித்திருந்தனர்.

எனினும், ஆலயச் சூழலில் மீள்குடியேற்றத் திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் ஆலய உரிமையாளரும், பூசகரும் இணைந்து நித்திய பூசையினை மேற்கொண்டு வந்திருந்தனர்.

நித்தியபூசையின் பொருட்டு, கோயில் பூசகர் கடந்த செவ்வாய்க்கிழமை காலை ஆலயத்திற்குச் சென்றவேளை, கதவு உடைக்கப்பட்டு மூலஸ்தானத்திலிருந்த ஐம்பொன்னாலான அம்மன் விக்கிரகம் திருட்டுப் போயிருப்பது தெரிய வந்துள்ளது, இது பற்றி காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (06)

# பொலிஸாரின் அறிவுறுத்தல்கள்

(அச்சுவேலி)

துவிச்சக்கரவண்டிகளில் பயணம் செய்யும் துவிச்சக்கர வண்டிப் பயணிகள், தமது துவிச்சக்கரவண்டிகளை ஓட்டிச் செல்வதற்குரிய தகுந்த நிலையில் பேணிக்கொள்ள வேண்டுமென பொலிஸார் அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.

இதற்கமைய துவிச்சக்கர வண்டிகளின் ரயர்கள் நல்ல நிலையில் பேணப்பட வேண்டியதுடன், தடுப்புத் தொகுதி (பிரேக்), ஒலிப்பு மணி (பெல்) போன்றவை சரியான முறையில் இயங்கும் நிலையில் இருக்க வேண்டும்.

அததுடன் இரவில் பயணம் செய்பவர்கள் கட்டாயம் முகப்புவிளக்கைப் பயன்படுத்த வேண்டும் என்றும் முகப்பு விளக்கு வெளிச்சமின்றி இரவில் பயணிப்பது தண்டனைக்குரியது என்றும், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கிவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

# நாவற்குழிப் பாலத்தினில் தடம்புரண்டது ஹையேஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கண்டி வீதியிலுள்ள நாவற் குழிப் பாலத்தில் நேற்றுக்காலை 'ஹையேஸ்' வாகனம் ஒன்று தடம்புரண்டதில் அதில் பயணம் செய்த இரண்டு பெண்கள் காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த இந்த வாகனத் தில் ஏழு பேர் இருந்ததாகவும், அவர்களில் இருவர் காயமடைந்துள்ளபோதும், தெய்வாதீனமாக எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விபத்துக்குள்ளான இவ்வாகனம் பாலத்திலிருந்த பள்ளத்தினுள் தூக்கி வீசப்பட்டதால், கடும் சேதத்திற்குள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த இருவரில் ஒருவர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியதாகவும், ஒருவர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மி)

## ஆதினியின் இன்றைய பலன்

(21.02.2011 – திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி மாசி 09

இராகுகாலம் 8.01– 9.31, சுபநேரம் 12.31 –2.01, துதியை காலை 7.53, அத்தம் மு.இ.11.26, சித்தம் சதுர்த்தி பி.இ. 5.34, சங்ஹடஹ சதுர்த்தி விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– புகழான செயல்களில் ஈடுபாடு, பெரியோர் ஆசி, குதூகலம்.

ரிஷபம்:– ஆரோக்கியம், போசன சுகம், தனலாபம்.

மிதுனம் :– விஷபயம், வாய்வு பீடை, மனச் சஞ்சலம்.

கடகம்:– சயன சுகம், பந்துக்கள் வரவு, நீண்ட பயணம்.

சிம்மம்:– பெரியோர் உதவி, வஸ்திரச் சேர்க்கை, ஆரோக்கியம்.

கன்னி :– வரவுக்கு மிஞ்சிய செலவு, பண நஷ்டம், காரியத்தடை.

துலாம் :– செல்வாக்குக் குறைதல், வீண் பிரச்சினை, மனக்குழப்பம்.

விருச்சிகம்:– பெரியோர் மதிப்பு, பெண்களால் உதவி, காரிய ஜெயம்.

தனுசு:– வழக்கில் வெற்றி, மேலாளர் உதவி, எதிரிகள் நேசம்.

மகரம்:– பொறாமைப்படல், தவறான எண்ணம், வீண் பிரச்சினை.

கும்பம் :– எதிரிகளால் நன்மை, மனமகிழ்ச்சி, தனலாபம்.

மீனம்:– செய்தியால் மகிழ்ச்சி, பொருட் சேர்க்கை, நண்பர்கள் சேர்க்கை.

# அறுவடை செய்யப்படுகிறது மண்டைதீவு நெற்கதிர்கள்



(மண்டைதீவு)

சுமார் 20 ஆண்டு களுக்குப் பின்னர் மண்டைதீவுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற் செய்கை தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகினறது.

யு.என்.டி.பி நிறுவனத்தின் பங்களிப்புடனும், கமநல சேவையின் ஊக்குவிப்புடனும் மேற் கொள்ளப்பட்ட இச் செய்கையால் மண்டைதீவு விவசாயிகள் பெரிதும் பயன்பெற்றுள்ளதாக வேலணை கமநல சேவைத் திணைக்கள வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது கிராஞ்சிக்குளப் பகுதியில் விதைக்கப்பட்ட நெற்கதிர்களே அறுவடை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (23)

## பனங்கிழங்கிற்கு பெரும் கிராக்கி

(திருநெல்வேலி)

யாழ்.நகரில் பனம் கிழங் கிழங்கிற்குத் திடீர்க் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தென்பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான சுற்றுலாப்பயணிகள் யாழ்ப்பாணம் வருகை தந்ததை அடுத்தே இதற்குக் கிராக்கி ஏற்பட்டு வருகிறது.

நகரில் 3 ரூபாவாக விற்கப்பட்ட ஒரு கிழங்கு திடீரென 5 ரூபாவாக அதிகரித்து விற்கப்பட்டபோது, சுற்றுலாப் பயணிகள் கிழங்கை முண்டியடித்துப் பெற்றுக்கொண்டதை அடுத்தே அதன் விலையை வியாபாரிகள் திடீரென அதிகரித்து விற்பனை செய்வதாகத் தெரியவருகிறது. (25)

# கடலுணவுகளுக்குத் தட்டுப்பாடு

(கொட்டடி)

கொட்டடி மாலைநேர மீன் விற்பனைச் சந்தையில் மீன்களின் விற்பனை தற்போது மிகக்குறைந்தே காணப்படுகின்றது. இந்தச் சந்தைக்கு பகல் வேளையிலேயே அகதிமான கடலுணவுகள் விற்பனைக்கு வந்து சேர்கின்றன. தீவுப்பகுதி, மற்றும் வடமராட்சி, குருநகர் போன்ற பிரதேசங்களில் இருந்து அதிகளவிலான கடலுணவுகள் தினமும் பகலில் எடுத்துவரப்படுகின்றன. பகலில் அதிகளவு கடலுணவுகள் வந்து சேர்வதனால் மாலையில் இச் சந்தையில் இவற்றிற்கு தட்டுப்பாடு நிலவுகின்றன. (25)



காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பாடசாலை அதிபர் உரையாற்றுவதையும் காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீவிக் னேஸ்வரன் வெற்றிபெற்ற இல்லத்திற்கான வெற்றிக் கேடயத்தை மாணவர்களுக்கு வழங்குவதையும் காணலாம். (50)

# இரகசியங்களை வெளியிடக்கூடாதென அமைச்சர்களுக்கு கண்டிப்பான உத்தரவு



(கொழும்பு)

அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்கள், அதில் பேசப்படுகின்ற விடயங்கள், எடுக்கப்படுகின்ற முடிவுகள் குறித்து அமைச்சர்கள் எவரும் ஊடகங்களிடம் மூச்சு விடக்கூடாது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் அமைச்சரவைக் கூட்டத்தில் நான்கு அமைச்சரவைப் பத்திரங்களைச் சமர்ப்பித்த பின்னரே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அமைச்சரவையில் பேசப்படுகின்ற விடயங்கள், எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் அமைச்சர்களால் ஊடகங்களுக்கு கசிய விடப்படுவதால் அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும், அதைத் தவிர்க்கும் வகையிலேயே அதுபற்றி மூச்சுக்கூடவிடக் கூடாது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அண்மையில் சிங்களத்தில் மட்டும் தேசியகீதம் பாட வேண்டும் என்று அமைச்சரவையில் மகிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரம் பற்றிய செய்தி வெளியே கசிந்ததால் அரசாங்கம் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்தது.

இதுபோன்ற நெருக்கடிகளைத் தவிர்க்கவே இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சந்திரிகா குமாரதுங்கவின் அமைச்சரவையில் தான் அமைச்சராக இருந்த போது அமைச்சரவைக் கூட்ட இரகசியங்களை தானும் ஊடகங்களுக்கு வழங்கியதாகவும் மகிந்த ராஜபக்ஷ இந்தக் கூட்டத்தில் ஒப்புக்கொண்டுள்ளார்.

# புதிய காணி அதிகாரங்களை பாதுகாப்பு அமைச்சு வழங்கும்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சுக்குப் புதிய காணி அதிகாரங்களை வழங்கும் வகையிலான வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை இலங்கை அரசாங்கம் கடந்த வாரம் வெளியிட்டுள்ளது.

இதன்படி மேல் மாகாணத்தில் உள்ள காணிகளை அபிவிருத்தி செய்யும் போது அல்லது நிரப்பும் போது பாதுகாப்பு அமைச்சின் கீழ் உருவாக்கப்படவுள்ள சட்டரீதியான குழுவொன்றிடம் அனுமதி பெறப்பட வேண்டும்.

அத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தலானது, காணி உரிமையாளர்கள் இலங்கை காணி மறுசீரமைப்பு, அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் அனுமதியைப் பெறுவதையும் கட்டாயமாக்கியுள்ளது.

ஏற்கனவே நகர அபிவிருத்தி அதிகாரசபை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டதன் பின்னர் கொழும்பு உள்ளிட்ட முக்கிய நகரங்களில் பாதுகாப்பு அமைச்சின் பிடி இறுக்கமடைந்தது.

இப்போது வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக மேல் மாகாணத்தில் உள்ள கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களின் மீதான பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாடு அதிகரிக்கவுள்ளது.

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சராக மகிந்த ராஜபக்ஷவும், பாதுகாப்புச் செயலராக அவரது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவும் பதவி வகிக்கின்றனர்.

# கருணாவின் கருத்தை கணக்கிலெடுக்க முடியாது



(கொழும்பு)

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு காவல்துறை அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழ்மக்கள் கௌரவத்துடனும், சுயமரியாதையுடனும் வாழ்வதற்கு அதிகாரப்பகிர்வு அவசியமானது.

மாகாண காவல்துறைகளை உருவாக்குவதற்கு சட்டத்தில் இடமுள்ள போது அதற்கு அனுமதி வழங்க அரசாங்கம் தயக்கம் காட்டுவது புரிந்து கொள்ள முடியாத ஒன்றாக உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மாகாணங்களுக்கு காவல்துறை அதிகாரங்கள் தேவையில்லை என்று அமைச்சர் முரளிதரன் கூறியுள்ளது பற்றி ஆனந்த சங்கரியிடம் கேள்வி எழுப்பப்பட்ட போது,

தனி ஒருவரின் கருத்தைக் கணக்கில் எடுக்க முடியாது. இதுபற்றிய தமிழ் மக்களின் கருத்து என்னவென்றே பார்க்க வேண்டும் என்றார்.

# விமானப்படைக்கு புதிய தளபதி

(கொழும்பு)

இலங்கை விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் றொசான் குணதிலக எதிர்வரும் 28ஆம் திகதி 55 வயதைப் பூர்த்தி செய்யவுள்ளார்.

55 வயதுக்கு மேல் படை அதிகாரிகளுக்கு சேவை நீடிப்பு வழங்குவதில்லை என்று இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளதால் இவர் ஓய்வு பெற வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை. அடுத்த மாதம் 2ஆம் திகதி தொடக்கம் ஒரு வாரகாலத்துக்கு இலங்கை விமானப்படையின் 60ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் முடியும் வரை விமானப்படைத் தளபதி எயர் மார்சல் றொசான் குணதிலகவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சேவை நீடிப்பு வழங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்பின்னர் எயர்சீவ் மார்சல் றொசான் குணதிலக ஓய்வு பெறவுள்ளார்.



இந்தநிலையில் இலங்கை விமானப்படையின் அடுத்த தளபதி யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

விமானப்படைத் தளபதிக்கு அடுத்த நிலையில் இருந்த தலைமை அதிகாரியான எயர் வைஸ் மார்ஷல் பி.பி.பிறேமச்சந்திராவே இந்தப் பதவிக்கு நியமிக்கப்படலாம் என்று முன்னர் கருதப்பட்டது.

ஆனால் அவர் கடந்த 1ஆம் திகதி ஓய்வுபெற்றுள்ள நிலையில் பாதுகாப்பு அமைச்சின் உயர் பதவி ஒன்றுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதனால் அடுத்த நிலையில் உள்ள பிரதித் தலைமை அதிகாரி எயர் வைஸ் மார்ஷல் அபேவிக்கிரம இந்தப் பதவிக்கு நியமிக்கப்படலாம் என்று கருதப்படுகிறது.

அல்லது அடுத்த நிலையில் உள்ள மூத்த அதிகாரியான எயர் வைஸ் மார்ஷல் கே.பி குணதிலகவுக்கும் விமானப் படைத் தளபதியாகும் வாய்ப்புக்கிடைக்கலாம்.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவே இலங்கை விமானப்படையின் அடுத்த தளபதி யார் என்பதைத் தீர்மானிப்பார்.

# பஹ்ரெய்ன் செல்வதற்கு இலங்கையர்களுக்கு தடை

(கொழும்பு)

இலங்கைப் பிரஜைகள் பஹ்ரெய்ன் நாட்டுக்கு வேலை வாய்ப்புத் தேடி செல்கின்றமைக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம தற்காலிகமாக தடை விதித்துள்ளது.

பஹ்ரெய்ன விமான நிலையத்தில் ஏதேனும் அசௌகரியங்களை இலங்கையர்கள் எதிர்கொள்ளக்கூடும் என்பதால் ஒரு வாரம்வரை இவ்வேற்பாடு நடைமுறைப்படத்தப்பட உள்ளது என பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

பக்ரெய்ன் நாட்டு மக்கள் அரசுக்கு எதிரான போராட்டங்களை முடுக்கி விட்டுள்ளனர். இதனால் அங்கு பாரிய வன்முறைகள் வெடித்துள்ளன. பொதுமக்கள் ஐவர் கொல்லப்பட்டு இருக்கின்றனர். 200 பேர்வரை காயம் அடைந்துள்ளனர்.

பஹ்ரெய்ன 10 ஆயிரம் பேர் வரை இலங்கையர்கள் வேலை பார்க்கின்றனர். ஆனால் இவ்வன்முறைச் சம்பவங்களில் இலங்கையர் எவரும் பாதிக்கப்படவில்லை என்று பணியகத்தின் தலைவர் தெரிவித்தார்.

# இரட்டைப் பிரஜாவுரிமைச் சர்ச்சை புலம் பெயர்ந்தோரைப் பாதிக்காது

(கொழும்பு)

இரட்டை பிரஜாவுரிமை வழங்கும் நடவடிக்கைகள் நவீனமயப்படுத்தப்படவுள்ளதுடன் அரசுக்கும், பிரஜாவுரிமை பெறுபவர்களுக்கும் அதிகளவு நன்மைகள் கிடைக்கும் விதத்தில் இந்நடை முறையை மேம்படுத்தும் வேலைகளை குடிவரவு குடியகல்வு திணைக்களம் மேற்கொண்டு வருகிறது என திணைக்களத்தின் பிரதான கட்டுப்பாட்டாளர் டபிள்யூ. ஏ. சூலானந்த பெரேரா தெரிவித்தார்.

இப் புதிய நடவடிக்கை மூலம் புலம் பெயர்ந்துள்ள தமிழர்கள் உட்பட புலம் பெயர்ந்துள்ள இலங்கையர்கள் மேலும் நன்மையடைவார்களே தவிர எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் செயற்பாட்டை குடிவரவு குடியகல்வு திணைக்களம் இடை நிறுத்தி வைத்துள்ளதாகவும், அங்கீகாரம் வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் அங்கீகாரத்துக்காக



சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக வெளிவந்துள்ள செய்தியை அவர் முற்றாக நிராகரித்தார்.

இரட்டை பிரஜாவுரிமை வழங்கும் செயற்பாட்டை மேம்படுத்துவது தொடர்பில் திணைக்களம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. இச்செயற்பாடு தற்போதைய காலத்துக்கு ஏற்றாற்போல மேம்படுத்தப்பட வேண்டியதன் தேவை குறித்தும் ஆராய்வதுடன் இரட்டைப் பிரஜாவுரிமை பெறுபவர்கள் மேலும் நன்மையடையும் விதத்தில் இரட்டை பிரஜாவுரிமை வழங்குவதால் இலங்கைக்கு மேலும் நன்மை கிடைக்கும் விதத்திலும் விரைவில் திணைக்களம் பிரஜாவுரிமை வழங்கும் செயற்பாட்டை அறிமுகம் செய்யவிருக்கிறது.

இது தொடர்பாக திணைக்களத்தின் இணையத்தளத்தின் ஊடாகவும் விரைவில் அறிந்து கொள்ள முடியும் என்றும் பிரதான கட்டுப்பாட்டாளர் டபிள்யூ.ஏ.சூலானந்த பெரேரா தெரிவித்தார்.

இரட்டைப் பிரஜாவுரிமை பெறும் ஒருவரிடமிருந்து இலங்கை அரசாங்கம் இரண்டு இலட்சம் ரூபாவைக் கட்டணமாக அறவிட்டு வந்தது. அவ்வாறான கட்டணங்கள் இலங்கைக்கு பொருளாதார நலனை பெற்றுத் தந்தது. அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து, பிரிட்டன், பிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து, இத்தாலி,ஸ்வீடன், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் பிரஜாவுரிமைகளைப் பெற்றுள்ள இலங்கைத் தமிழர்களும் இரட்டைப் பிரஜாவுரிமை திட்டத்தின் கீழ் இது வரை இலங்கையிலும் பிரஜாவுரிமை பெற்றுவந்துள்ளனர்.

## - கிழக்கு மாகாணத்தில் -

# பொலிஸ் ஆணைக்குழு அமைக்க அரசு நடவடிக்கை

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் ஊடாக கிழக்கு மாகாணத்திற்கான மாகாண பொலிஸ் ஆணைக்குழு அமைப்பது தொடர்பிலான பிரேரணையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் எமது செய்திப்பிரிவிற்கு தெரிவித்தன.

இது தொடர்பிலான பிரேரணையொன்று கிழக்கு மாகாண சபையில் விரைவில் நிறைவேற்றப்பட்டு மாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

மூன்று உறுப்பினர்களைக் கொண்ட இந்த ஆணைக்குழுவிற்கு மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தலைவராக செயற்படுவார்.

ஜனாதிபதி மற்றும் மாகாண முதலமைச்சர் ஆகியோரால் தலா ஒருவர் இந்த ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர்.

இந்த மாகாண பொலிஸ் ஆணைக்குழு, மாகாணத்திலுள்ள பொலிஸாரின் இடமாற்றங்கள் பதவியுயர்வுகள், ஒழுக்காற்று கட்டுப்பாடுகள் போன்றவற்றிற்கு பொறுப்பாக செயற்படும்.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அவை இதுவரை வழங்கப்படவில்லை.

## தினமுரசு இலங்கை எதிர் கனடா SCORE CARD

மைதானம் : அம்பாந்தோட்டை. திகதி : 20-02-2011 ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி இலங்கை : முதலில் துடுப்பாட்டம்.


| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01. தரங்க | run out (குணசேகர/பகாய்) | 19 |
| 02. டில்சான் | c டேவிற்சன் b சீமா | 50 |
| 03. சங்கக்கார | c@b டேவிற்சன் | 92 |
| 04. ஜெயவர்த்தன | c பாலாஜீ ராவ் b டேவிற்சன் | 100 |
| 05. பெரேரா | run out (சுரகாரி /பகாய்) | 11 |
| 06. மத்தியூஸ் | c@b பெய்ட்வான் | 21 |
| 07. கப்புக்கெதர | c குமார் b பெய்ட்வான் | 02 |
| 08. சமரவீர | (not out) | 18 |
| 09. குலசேகர | (not out) | 07 |
| 10. முரளிதரன் | | |
| 11. மெண்டிஸ் | | |
| உதிரிகள் | (b 3, , w 8, nb 1) | 12 |
| மொத்தம் | (7 w 50 ஓவர்கள்) | 332 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01. குணசேகர | c டில்சான் b குலசேகர | 01 |
| 02. டேவிற்சன் | b பெரேரா | 00 |
| 03. சுர்காரி | lbw b பெரேரா | 06 |
| 04. ஹன்ஸ்ரா | st சங்கக்கார b சமரவீர | 09 |
| 05. பகாய் | c சங்கக்கார b பெரேரா | 22 |
| 06. சீமா | c ஜெயவர்த்தன b முரளிதரன் | 37 |
| 07. ஹோடன் | c சங்கக்கார b குலசேகர | 04 |
| 08. சௌகன் | c சங்கக்கார b குலசேகர | 03 |
| 09. பெய்ட்வன் | (not uut) | 16 |
| 10. பாலாஜீ ராவ் | c தரங்க b முரளிதரன் | 06 |
| 11. ஒசின்டி | b மெண்டிஸ் | 04 |
| உதிரிகள் | (lb 8, w4, nb 1) | 13 |
| மொத்தம் | (oll out: 36.5 ஓவர்கள்) | 122 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| டேவிற்சன் | 08 | 56 | 02 |
| பெய்ட்வான் | 8.5 | 59 | 02 |
| சீமா | 07 | 47 | 02 |
| ஒசின்டி | 02 | 10 | 00 |
| சௌகன் | 8 | 62 | 00 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| குலசேகர | 06 | 16 | 03 |
| பெரேரா | 07 | 24 | 03 |
| மெண்டிஸ் | 7.5 | 18 | 01 |
| முரளிதரன் | 09 | 38 | 02 |
| சமரவீர | 02 | 04 | 01 |

**210 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றி. ஆட்டநாயகன் : ஜெயவர்த்தன**





## இன்றைய ஆட்டம்


ICC Cricket World Cup 2011



அவுஸ்ரேலியா எதிர் சிம்பாப்வே

மைதானம் : அஹமதாபாத்

பகலிரவு ஆட்டம்



ICC Cricket World Cup 2011







## தினமுரசு நியூசிலாந்து எதிர் கென்யா SCORE CARD

மைதானம் : சென்னை. திகதி : 20-02-2011 ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி கென்யா: முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01. ஒபாண்டா | lbw (b) சௌத்தி | 06 |
| 02. வோட்டர்ஸ் | lbw (b) பெனட் | 16 |
| 03. ஒபயா | lbw (b) பெனட் | 14 |
| 04. ரிக்கோலோ | (b) பெனட் | 02 |
| 05. ஒயுமா | (b) பெனட் | 01 |
| 06. பட்டேல் | (Not Out) பெனட் | 16 |
| 07. கமன்டி | மக்குலம் (b) ஓரம் | 02 |
| 08. ஒடோயோ | ரைடர் (b) ஓரம் | 02 |
| 09. ஒட்கியம்போ | (b) சௌத்தி | 00 |
| 10. ஒபடோ | lbw (b) சௌத்தி | 00 |
| 11. ஒற்றினோ | ஸ்ரைரிஸ் (b) ஓரம் | 00 |
| உதிரிகள் | (b 4, lb 3, w 2, nb 1) | 10 |
| மொத்தம் | (oll out 23.5 ஓவர்கள்) | 69 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01. குப்ரில் | (not uut) | 39 |
| 02. மக்கலம் | (not uut) | 26 |
| 03. ரைடர் | | |
| 04. ரெய்லர் | | |
| 05. ப்ரைங்கிளின் | | |
| 06. ஸ்ரைரிஸ் | | |
| 07. விட்டோரி | | |
| 08. எம். மக்கலம் | | |
| 09. ஓரம் | | |
| 10. சௌத்தி | | |
| 11. பெனட் | | |
| உதிரிகள் | (b 2, lb 1, w 3, nb 1) | 07 |
| மொத்தம் | (0: w 08 ஓவர்கள்) | 72 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| சௌத்தி | 06 | 13 | 03 |
| எம். மக்கலம் | 04 | 15 | 00 |
| பெனட் | 05 | 16 | 04 |
| விற்றோரி | 06 | 16 | 00 |
| ஓரம் | 2.5 | 02 | 03 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| ஒடோபோ | 03 | 25 | 00 |
| ஒற்றியோ | 02 | 18 | 00 |
| கமண்டி | 02 | 21 | 00 |
| ஒட்சியம்போ | 01 | 05 | 00 |
| | | | |

**10 விக்கெட்டுக்களால் நியூசிலாந்து அணி வெற்றி. ஆட்டநாயகன் : பெனட்**

ARRUL GLOBAL EXPRESS

International Courier & Cargo Service

வெளிநாடுகளுக்கான கடிதங்கள் மற்றும் பொதிகள் சேவை

லண்டன் 1 kg 800/= மட்டுமே.

கனடா, அமெரிக்கா, பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மனி, இத்தாலி, நோர்வே 1 kg 950/= மட்டுமே.

T.P. :- 021 222 6113

(C/469)

அனுசரணையாளர்:

அதி விரைவு சேவை

இல: 01, பிறவுண் வீதி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# மக்களின் தொடர் போராட்டத்தால் அரபு நாடுகளிடையே கடும் பதற்றம்



(டுபாய்)

அரபு நாடுகளில் நீண்ட காலமாக ஆட்சியில் இருப்பவர்களுக்கு எதிராக அந்நாட்டு மக்கள் மேற்கொண்டு வரும் பாரிய ஆர்ப்பாட்டப் பேரணிகளால் அந்நாடுகளுக்கிடையே கடும் பதற்றமான சூழல் உருவாகியுள்ளது.

துனிசியா, எகிப்து ஆகிய நாடுகளில் நீண்ட காலமாக நடந்து வந்த ஜனாதிபதி ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தினர். இதனால், அந்த இரண்டு நாடுகளிலும் ஜனாதிபதிகள் பதவி விலகி ஜனநாயக ஆட்சிக்கு வழி விட்டுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில், மற்ற அரபு நாடுகளிலும் இந்தக் கிளர்ச்சி பரவி உள்ளது. அல்ஜீரியா, பஹ்ரெய்ன், லிபியா, ஜோர்தான், ஏமன் ஆகிய நாடுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றனர்.

குறிப்பாக, லிபியாவில் மிகத் தீவிரமாக போராட்டம் நடைபெறுகிறது. அங்கு ஜனாதிபதியாக இருக்கும் முகமட் கடாபி, கடந்த 42 ஆண்டுகளாக ஆட்சி செய்து வருகிறார். தற்போது 68 வயதாகும் அவர், கடந்த 1969 ஆம் ஆண்டு முதல் லிபிய ஜனாதிபதியாக இருந்து வருகிறார். கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தீவிரமாகி உள்ள போராட்டம், மேற்குப் பகுதிகளிலும் பரவி உள்ளது.

லிபியா தலைநகர் திரிபொலியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவில் ஏராளமான மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடினார்கள். ஆனால், போராட்டத்தை அடக்க இராணுவத்தை கடாபி ஏவி விட்டுள்ளார். மேலும், பல்வேறு இடங்களில் அரசு ஆதரவு போராட்டததையும் ஊக்குவித்து வருகிறார். கடாபிக்கு உதவியாக அவருடைய மகனும் கால்பந்து வீரருமான அல்-சாதி களம் இறங்கியுள்ளனர்.

இதனால், போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. போராட்டம் பரவாமல் தடுப்பதற்காக நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணி முதல் இணையத்தள சேவை முற்றிலுமாக முடக்கப்பட்டது. தலைநகரில் போராட்டம் நடத்திய சட்டத்தரணிகள், நீதிபதிகள் ஆகியோர் தாக்கப்பட்டனர்.

கடந்த மூன்று நாட்களில் நடந்த போராடடத்தில் இதுவரை 84 பேர் வரை பலியாகி இருப்பதாக அமெரிக்க மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன. இது போல, பஹ்ரெய்ன நாட்டில் மன்னர் ஹமாத்துக்கு எதிராகப் போராட்டம் வெடித்துள்ளது. தெருக்களில் இராணுவமும், பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, மன்னர் ஹமாத்திடம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தொலைபேசியில் பேசினார். அப்போது, அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்துமாறு மன்னரை ஒபாமா கேட்டுக்கொண்டார். அதைத தொடர்ந்து, போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்த ஹமாத் முன்வந்தார். அதற்காக தனது மகனும் இராணுவத் துணை தலைமை தளபதியுமான சல்மான் ஹமாத்தை அனுப்பினார்.

ஆனால், பேச்சுவார்த்தைக்கு வர ஷியாப் பிரிவு எம்.பி.க்கள் மறுத்துவிட்டனர். தெருக்களில் இராணுவத்தைக் குவித்து வைத்துக் கொண்டு பேச்சு வார்த்தை நடத்துவதில் அர்த்தம் இல்லை எனத் தெரிவித்துள்ளனர். இதனால், பஹ்ரெய்னில் போராட்டம் தொடருகிறது. ஷியா முஸ்லிம்கள் அதிகமாக உள்ள தலைநகர் பனாமாவில் போராட்டம் தீவிரமாகி உள்ளது. சன்னிப் பிரிவைச் சேர்ந்த மன்னர் ஹமாத்தைப் பதவி விலகச் செய்வதில் உறுதியாக இருக்கின்றனர்.

இது போல, மற்றொரு அரபு நாடான ஜோர்தானிலும் போராட்டம் நடைபெறுகிறது. ஜனநாயக ஆட்சியை வலியுறுத்தி தலைநகர் அம்மானில் ஆயிரக்கணக்கானோர பங்கேற்ற அமைதிப்பேரணி நடந்தது. அப்போது, அரசு ஆதரவாளர் கும்பல் ஆயுதங்களுடன் வந்து பேரணியில் சென்றவர்களைச் சரமாரியாகத் தாக்கியது.

இதனால், ஏராளமானோர் காயமடைந்தனர். ஏற்கனவே, ஜோர்தான் அமைச்சரவையை மன்னர் அப்துல்லா கலைத்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. ஏமன் நாட்டிலும் மக்கள் புரட்சி வெடித்துள்ளது. தலைநகர் சானாவில் நேற்றுமுன்தினம் நடந்த பேரணி மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள். அதில் ஒருவர் பலியானார். 5 பேர் காயமடைந்தனர். துறைமுக நகரான ஏமன் நகரில் இரண்டு அரசுக் கட்டடங்கள், ஒரு பொலிஸ் நிலையம் ஆகியவற்றை 7 ஆயிரம் போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டுத் தீ வைத்தனர். அல்ஜீரியா உள்ளிட்ட நாடுகளிலும் ஜனநாயக ஆட்சியை வலியுறுத்தி மக்கள் போராடுவதால் அரபு நாடுகளில் கடும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

# மீண்டும் பிடியாணை



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் கொலை வழக்கைத தீவிரவாத தடுப்பு நீதி மன்றம் விசாரித்து வருகிறது. இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு உள்ள முன்னாள் ஜனாதிபதி முஷாரப் ஆஜராக வேண்டும் என்று நீதிமன்றம் அவருக்குப் பிடியாணை பிறப்பித்தது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம விசாரணைக்கு வந்தபோது, பொலிஸார் தரப்பில், முஷாரப் இங்கிலாந்து நாட்டில் வசித்து வருவதால், இந்தப் பிடியாணையை அவரிடம் வழங்க முடியவில்லை என்று தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து மீண்டும் பிடியாணையை நீதிமன்றம் பிறப்பித்து உள்ளது. இந்தப் பிடியாணையின் பிரதியை இஸ்லாமாபாத்தில் உள்ள முஷாரப் பின் வீட்டிலும், லண்டனில் உள்ள வீட்டிலும் வழங்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# ஆப்கானில் அமைதியை நிலைநாட்ட அமெரிக்கா, தலிபான்களுடன் பேச்சு

(நியூயோர்க்)

ஆப்கானில் அமைதியை ஏற்படுத்துவதற்காகத் தலிபான் தீவிரவாத அமைப்பின் முக்கிய தலைவர்களுடன் அமெரிக்கா இரகசியமான முறையில் பேச்சுவார்த்தையைத் தொடங்கி இருப்பதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

கடந்த 2001 இல் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் மீது அல்கொய்தா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து அமெரிக்கா தலைமையிலான நேட்டோப் படையினர் அல்கொய்தா அமைப்பின் புகலிடமாக விளங்கும் ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுத் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதன் மூலம் 2001 இல் அல்கொய்தா இயக்கத்துக்குத் துணையாக இருந்த தலிபான்களின் ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டது.

இப்போது அமெரிக்காவின் வழிகாட்டுதலில் பொம்மையரசு செயற்பட்டு வருகிறது. அல்கொய்தா அமைப்புக்குத் தலிபான் தீவிரவாதிகள் உறுதுணையாகச் செயற்படுவதால் அல்கொய்தா இயக்கத்தை ஒழித்துக் கட்டுவதற்கான அமெரிக்காவின் முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் அல்கொய்தா இயக்கத்தைத் தனிமைப்படுத்துவதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அதன்படி தலிபான் தீவிரவாதிகளுடன் அமெரிக்கா நேரடியா இரகசியப் பேச்சுவார்தையில் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்கப் பத்திரிகையாளர் ஒருவர் கூறியுள்ளார்.


10 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி - 2011

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு
கிரிக்கெட் ஆர்வலர்களிடையே தினமொரு போட்டியை
நடாத்தி தினமொரு பரிசில்களை வழங்க தினமுரசு எண்ணியுள்ளது

38 நாட்கள் மட்டுமே நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டிகள் தொடர்பாக தினமுரசில் கேட்கப்படும் கேள்விகளுக்கான சரியான விடைகளை தினமும் அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள் .

வெற்றியாளர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.
38 வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் காத்திருக்கின்றன.

எனவே விடைகளை அனுப்புங்கள் பரிசில்களை அள்ளுங்கள்

தினமுரசில் வெளியாகும் கூப்பனில் மட்டும் விடைகளை எழுதி அனுபப்வேண்டும் ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்

போட்டி இல.5

அனுப்ப வேண்டிய முகவரி:-
தினமுரசு
விளையாட்டு அரங்கு,
இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ICC Cricket World Cup 2011

தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.

1 ) 23ஆம் திகதி நடைபெறவுள்ள பாகிஸ்தான் மற்றும் கென்யா அணிகளுக்கிடையிலான போட்டியில் வெற்றிபெறப்போகும் அணி எது?

2 ) இப்போட்டியின் ஆட்ட நாயகன் யார்?

பெயர்: ........................................
முகவரி : ........................................
போ.இல : ........................................
விடைகள் : 01) ........................................
02) ........................................

உங்கள் விடைகளை 23 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள்.


# உலகக் கிண்ணக் கிரிக்கெட்-2011

## யாருக்குக் கிண்ணம்?

இம்முறை உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றக் கூடிய அணி என்று பலராலும் கணிக்கப்பட்டுள்ள அணியாக இந்திய அணி காணப்படுகிறது.

ஆனால் உலகக் கிண்ணத்தை கைப்பற்றக் கூடிய வாய்ப்புள்ள அணியாக இலங்கை, அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து அணிகளும் உள்ளன என்பதனையும் நாம் கவனத்தில் கொண்டே ஆக வேண்டும்.

தொடர்ச்சியாக மூன்று முறை உலகக் கிண்ணத்தைக் கைப் பற்றிய அணியாகவுள்ள அவுஸ்ரேலியா, தற்போது பெரும் சரிவினைக் கண்டுள்ளதனை நாம் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். காரணம் உலக்கிண்ணப் போட்டிகளுக்கு முன்னதாக நடைபெற்ற இரண்டு பயிற்சிப் போட்டிகளிலும் அவுஸ்ரேலியா தோல்வியையே அடைந்தது.

இந்திய அணிக்கே உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றும் வாய்ப்பு எனப் பலரும் கருதுவதற்குக் காரணம் அதன் சொந்த மண்ணில் போட்டிகள் நடப்பதேயாகும். ஆனால் அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் இந்திய மண்ணில் ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியும் உள்ளன.

இதேவேளை, உலகக் கிண்ணத்தை நடத்திய நாடுகள் வரிசையில் 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை இலங்கை அணி கைப்பற்றியதுடன் கடந்த போட்டியில் இறுதிவரை முன்னேறிய அணியாகவும் உள்ளது.

இன்று அவுஸ்ரேலியாவும், சிம்பாவே அணியும் மோதவுள்ளன. இப்போட்டியில் அவுஸ்ரேலியாவுக்கான வெற்றி வாய்ப்புக்கள் அதிகமாக இருந்தாலும் இனிவரும் போட்டிகளில் அவுஸ்ரேலியா பாரிய அழுத்தங்களுக்கு மத்தியிலேயே களமிறங்கியுள்ளது.

அத்துடன், தென்னாபிரிக்க அணியையும் குறைத்து மதிப்பிட முடியாது. இந்த அணிக்கு கிண்ணத்தைப் பெறுவதற்கு இதுவரை அதிஷ்டம் கைகொடுக்காத போதிலும், இந்த உலகக் கிண்ணத்தையாவது வெல்வதற்கு அந்த அணியும் முனைப்புடன் செயற்படும்.


அவ்வாறெனில் பிரதான அணிகளுக்கிடையிலான போட்டிகள் அனைவருக்கும் விருந்தளிக்குமா? போட்டிகளின் போக்குகள் இதற்கு விடை தரும்.

### தினமொரு தகவல்

ICC Cricket World Cup 2011

## கடத்தப்பட்டுள்ள கலெக்டரை மீட்பதற்காக

# மாவோயிஸ்ட் தளபதி மனைவி விடுதலை



(புதுடில்லி)

ஒரிசா மாநிலத்தில் மல்கான் கிரி மாவட்ட கலெக்டர் கிருஷ்ணா, பொறியியலாளர் பவித்ரா மோகன் ஆகியோரை மாவோயிஸ்ட்டுக்கள் கடத்திச் சென்றனர். அவர்களை விடுவிக்க வேண்டுமானால் சிறையில் இருக்கும் 700 மாவோயிஸ்ட்டுக்களை விடுவிக்க வேண்டும், தங்கள் மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும் என்பது உட்பட 7 நிபந்தனைகளை விடுத்தனர்.

கோரிக்கைகளைப் பரிசீலிப்பதாக ஒரிசா அரசு அறிவித்தது. இதையடுத்து ஆந்திராவைச் சேர்ந்த பேராசிரியர்கள் சோமேசுவர ராவ், ஹர்கோபால் ஆகியோரை மாவோயிஸ்ட்டுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தூதுவர்களை நியமித்தன.

அவர்கள் இருவரும் நேற்று முன்தினம் புவனேசுவரம் வந்து சேர்ந்தனர்.

இதன் முதல் கட்டமாக மாவோயிஸ்ட் இயக்கத் தளபதி ராமகிருஷ்ணாவின் மனைவி பத்மா என்ற சாரதாவை விடுதலை செய்ய ஒரிசா அரசு முடிவு செய்துள்ளது. அவரை எந்த் நேரத்திலும் விடுவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அவரது விடுதலையை தொடக்கமாக வைத்து மாவோயிஸ்ட்டுக்களின் வேறு சில கோரிக்கைகளையும் நிறைவேற்ற அரசு திட்டமிட்டுள்ளது.

முன்பு இந்திய விமானத்தை பாகிஸ்தான் தீவிரவாதிகள் கடத்தி ஆப்கானிஸ்தானில் உள்ள கண்டகாருக்கு கொண்டு சென்றபோது இந்திய அரசு தீவிரவாத இயக்க தலைவர் மசூத் அசார் மற்றும் சிலரை விடுவித்து பயணிகளை மீட்டது.

அதே பாணியில் இப்போது மாவோயிஸ்ட்டுக்கள் முக்கிய தலைவர்களை விடுவித்து, கலெக்டரை மீட்க ஒரிசா அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

# மீண்டும் சந்திப்பு

(சென்னை)

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதாவை போயஸ் கார்டனில் உள்ள அவரது இல்லத்தில் நடிகர் விஜயின் தந்தையும் இயக்குனருமான எஸ்.ஏ.சந்திரசேகரன் நேற்றுமுன் தினம் மாலை 6.50 மணிக்கு சந்தித்து 20 நிமிடம் பேசினார்.

இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதைக் கண்டித்து நடிகர் விஜய் நாளை நாகப்பட்டினத்தில் தனது ரசிகர்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்.

இநத ஆர்ப்பாட்டத்திற்கு அ.தி.மு.க. ஆதரவு வேண்டி ஜெயல லிதாவை, சந்திரசேகர் சந்தித்துப் பேசியதாகக் கருதப்படுகிறது.

ஆனால், ஜெயலலிதா-விஜய் தந்தை சந்திப்பு குறித்து இரு தரப்பில் இருந்தும் எந்த விதமான தகவலும் வெளியிடப்படவில்லை.

## மலேசியாவாசுதேவன் காலமானார்



பிரபல பின்னணிப் பாடகர் மலேசியா வாசுதேவன் நேற்றுச் சென்னையில் தனியார் மருத்துவமனையில் காலமானார். உடல் நலக்குறைவால் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலமானார். இவர் பின்னணிப் பாடகராக மட்டுமல்லாது, திரைப்படங்களில் குணசித்திர, வில்லன் வேடங்களிலும் நடித்துள்ளார்.

## கறுப்புப்பண குற்றச்சாட்டிற்குப் பதில்

# அத்வானிக்கு சோனியா விளக்க கடிதம்

(புதுடெல்லி)

வெளிநாட்டில் உள்ள ரகசிய வங்கிகளில் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி, அவருடைய கணவரும், மறைந்த முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தி ஆகியோர் பெயர்களில் கறுப்புப் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாக பா.ஜனதா நியமித்த ஒரு குழு அறிக்கை வெளியிட்டது.

இதற்கு மறுப்பு தெரிவித்து, கடந்த 15 ஆம் திகதி, பா.ஜனதா மூத்த தலைவர் அத்வானிக்கு சோனியாகாந்தி கடிதம் எழுதினார். அதையடுத்து, 16 ஆம் திகதி, சோனியாகாந்தியிடம் வருத்தம் தெரிவித்து அத்வானி கடிதம் எழுதினார்.

இந்நிலையில், கடந்த 15 ஆம் திகதி, அத்வானிக்கு சோனியா காந்தி எழுதிய கடித விவரம் வெளியாகியுள்ளது. அதில் சோனியாகாந்தி கூறி இருப்பதாவது:-

பா.ஜனதாவால் நியமிக்கப்பட்ட ஒரு குழு, வெளிநாட்டு ரகசிய வங்கிகளில் இந்தியர்களின் கறுப்புப் பணம் என்ற தலைப்பில் ஒரு புத்தகம் வெளியிட்டு இருப்பது, எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. அதில், என் மீதும், என் கணவர், தாயார் உள்ளிட்ட குடும்பத்தினர் மீதும் அடிப்படை ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுளளன.

இத்தகைய பொய்கள், அவ்வப்போது சில பத்திரிகைகளாலும், சில கட்சிகளாலும் சொல்லப்பட்டு வருகின்றன. அவற்றையெல்லாம் வெறும் அவமதிப்பாகவே நான் கருதி வந்துள்ளேன். ஆனால், அந்த புத்தகம், தங்கள் (அத்வானி) தலைமையில் நடைபெற்ற விழாவில் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய ஜனநாயக கூட்டணியிலும், பா.ஜனதாவிலும் முக்கிய பதவிகள் வகிக்கும் தங்களைப் போன்ற அந்தஸ்து பெற்ற தலைவர், இத்தகைய தீயநோக்கமுள்ள கட்டுக்கதைகளை ஆதரிப்பதை அறிந்து நான் வியப்பும், ஏமாற்றமும் அடைந்தேன். இவ்வாறு சோனியா காந்தி கூறியுள்ளார்.

இந்தக் கடிதத்தைப் படித்த பிறகுதான், வருத்தம் தெரிவித்து, சோனியாவுக்கு அத்வானி கடிதம் எழுதினார்.

# முப்பது இலட்சம் பெண்கள் ஒன்றுகூடி பகவதி அம்மனுக்கு பொங்கல் விழா



(சென்னை)

திருவனந்தபுரத்தில் உள்ள ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோவில், கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்து பிரசித்தி பெற்றது. பெண்களின் சபரிமலை என்று போற்றப்படும் இந்தக் கோவிலில் ஆண்டுதோறும் 10 நாட்கள் பொங்கல் திருவிழா நடைபெறும்.

இந்த ஆண்டின் திருவிழா, கடந்த 11 ஆம் திகதி அம்மனுக்கு காப்புக்கட்டி குடியிருத்தலுடன் தொடங்கியது. நேற்று நள்ளிரவு குருதி பூஜையுடன் விழா நிறைவடைந்தது.

9 ஆம் திருநாளான நேற்று முன்தினம் விழாவின் சிகர நிகழ்ச்சியான பொங்கல் வழிபாடு நடந்தது. கடந்த வெள்ளிக்கிழமை காலை முதலே, வெளியூர்களைச் சேர்ந்த பெண்கள், கோவில் அருகில் பொங்கல் அடுப்புகளுககான இடங்களை பிடித்து விட்டு தங்கியிருந்தனர்.

அதிகாலை 4 1/2 மணிக்கு நடை திறக்கப்பட்டு பூஜைகள் நடந்தன. காலை 10.45 மணிக்கு கோவில் முன் அமைக்கப்பட்டு இருந்த பிரதான அடுப்பில், துணை மேல் சாந்தி தீ மூட்டினார். அதைத் தொடர்நது, தயாராக வைக்கப்பட்டிருந்த அடுப்புகளில் பெண்கள தீ மூட்டினர்.

ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு விடுக்கப்பட்டதை தொடர்ந்து கோவில் வளாகம், சுற்றுப்புறம் மற்றும் திருவனந்தபுரம் நகரின் பல பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த லட்சக்கணக்கான அடுப்புகளில் தீப்பற்ற வைக்கப்பட்டு, ஒரேநேரத்தில் லட்சக்கணக்கான அடுப்புகளில் பொங்கலிட்டது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஆற்றுக்கால் பகவதியம்மன் கோவிலில் தொடங்கிய அடுப்புகளின் வரிசை 8 கிலோ மீட்டர் தூரம் வியாபித்துக் காணப்பட்டது.


30 லட்சத்துக்கும் அதிகமான பெண்கள் கூடி பொங்கல் வைத்தனர். சர்க்கரை பொங்கல், வெண் பொங்கலுடன் பாயசம், கொழுக்கட்டை உள்ளிட்டவைகளையும் தயாரித்து அம்மனை வேண்டி வணங்கினர்.


ஒரேநேரத்தில் லட்சக்கணக்கான பானைகளில் பொங்கல் வைக்கப்பட்டதால் திருவனந்தபுரம் நகரம் முழுவதும் புகை மூட்டமாகக் காணப்பட்டது.


இந்தப் பொங்கல் வழிபாட்டில், பிரபல நடிகைகள் கே.பி.ஏ.சி.லலிதா, மேனகா, கல்பனா, சிப்பி, கார்த்திகா, மத்திய மந்திரி வேணு கோபாலின் மனைவி ஆஷா, அவர்களது மகள் பார்வதி, பிரபல கிரிக்கெட் வீரர் சிறிசாந்தின் தாய் உட்பட திரளான பெண்கள் கலந்து கொண்டனர். ஏராளமான வெளிநாட்டுப் பெண்களும் பொங்கல் வைத்தனர்.

பிற்பகல் 2.30 மணிக்கு உச்சபூஜையைத் தொடர்ந்து, பொங்கல் நைவேத்தியம் நிகழ்சசி நடந்தது. பூசாரிகள் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று மந்திரங்கள் ஓதி, பொங்கல் பானைகளுக்கு புனித நீர் தெளித்தனர்.

பின்னர் பக்தர்கள் தங்கள் பொங்கல் பிரசாத பானைகளுடன் ரெயில், பஸ், வேன், கார், இரு சக்கர வாகனங்கள் மூலம் வீடுகளுக்குச் சென்றனர். இதனால் உள்ளூர் மற்றும வெளியூர் பஸ்கள் மற்றும் புகையிரதங்களில் கூட்டம் அலை மோதியது.







இந்தியாவின் பீகார் மாநிலத்தின் Buxal என்ற இடத்தில் நெஞ்சுப் பகுதியில் இரு கால்களும், இரண்டு கைகளும் வெளிவந்த நிலையில் இருந்த சிறுவனுக்கு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு அவன் நலமுடன் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அறுவைச் சிகிச்சைக்கு முன்னர் சிறுவனின் தோற்றத்தையும் சிகிச்சை நடைபெறுவதையும், அறுவைச் சிகிச்சையின் பின் தந்தையுடன் சிறுவன் மகிழ்ச்சியுடன் இருப்பதையும் காணலாம்.

# ரங்காவின் வேட்பாளர்கள் ஆளுங்கட்சியில் இணைவு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு,பாண்டியன் குளம் பிரதேச சபைத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்காவின் தலைமையிலான பிரஜைகள் முன்னணியின் பஸ் சின்னத்தில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் ஞானசீலன் ரொபின், அக்கட்சியிலிருந்து விலகி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே இவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் முன்னிலையில் இணைந்துள்ளார்.

பாண்டியன்குளம் பிரதேச சபைக்கான பிரஜைகள் முன்னணியின் முதன்மை வேட்பாளர் ஞானசீலன் ரொபினுடன் அக்கட்சியின் மற்றுமொரு வேட்பாளர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் தெரிவித்தார்.

# பெருமளவான இளைஞர்,யுவதிகள் பொலிஸ் சேவைக்கு விண்ணப்பிப்பு

(வவுனியா)

இலங்கை பொலிஸ் சேவைக்கு திருமணமாகாத இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்ட நிலையில்,வவுனியா மாவட்டத்திலிருந்து பெருமளவிலானவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 25ஆம்திகதியென பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

யுத்தம் நிறைவடைந்த நிலையில் படித்த,வேலையற்ற பெருமளவிலான தமிழ் இளைஞர்,யுவதிகள்,பொலிஸ் சேவையில் இணைந்துகொள்ள விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

இதேவேளை,வன்னி மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கமைய வவுனியாவில் சேவையிலுள்ள பொலிஸாருக்கு விசேட தமிழ்மொழி மூலமான பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

# பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு திறக்கப்பட்டன வங்கிக்கணக்குகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பெற்றோரை இழந்த 270 சிறார்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா பணம் வைப்பிலிட்டு வங்கிப் புத்தகங்கள் வழங்கப்பட்டதுடன், அபிவிருத்திக்குரிய கடன்களும் வழங்கப்பட்டது.

இந்த வைபவத்தில் இலங்கை வங்கித் தலைவர் காமினி விக்கிரமசிங்கா கலந்து கொண்டார்.

அத்துடன் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 700 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டது. கிளிநொச்சி இலங்கை வங்கிக்கிளை ஊழியர்கள் தமது ஒரு நாள் வேதனத்தை இந்தத் திட்டத்திற்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாடுகளின் தொல்லையால் பொதுமக்கள் பெரும் அவதி

(மன்னார்)

மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதால் பொதுமக்கள் பெரும் இன்னல்களை அடைவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

மன்னார்-மதவாச்சி பிரதான வீதிக்கு அருகாமைகளில் மாடுகளின் மேய்ச்சல் நிலங்கள் காணப்படுகின்றது. அவற்றில் பகல் நேரங்களில் மாடுகள் மேய்ந்து விட்டு இரவு நேரங்களில் வீதிக்குக் குறுக்காகவும், வீதிக்கு அருகாமையிலும் கூட்டம் கூட்டமாகப் படுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எண்ணை,எரிவாயு வளங்கள் இந்தியாவிற்கு வழங்கத் தயார்

**இலங்கையில் சீனா அதிக செல்வாக்கினைச் செலுத்திவரும் இந்தக் காலப்பகுதியில் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் இலங்கையில் தொடர் தலையீட்டினை மேற்கொள்ளும் ஒரு முனைப்பாகவே இந்தியாவின் இந்தச் செயல் கருதப்படுகிறது.**

**இவ்வாறு *livemint.com* இணையத்தளத்திற்காக *Utpal Bhaskar & Elizabeth Roche* எழுதிய கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.**

இலங்கையின் வடக்குக் கடற்பிராந்தியத்தில் ஹைட்ரோகாபன் [hydrocarbon] படிவுகள் காணப்படும் பகுதிகளில் எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வினை மேற்கொள்வதற்காக மூன்று துண்டுகளை [blocks] நியமன அடிப்படையில் இந்தியாவின் ஓ.வி.எல் [ONGC Videsh Ltd] நிறுவனத் திற்கு வழங்குவதற்குச் இலங்கை தயாராக இருப்பதாகத் தெரிகிறது. இது குறிப்பிட்டுக் கூறக்கூடியதொரு இராச தந்திர முன்னேற்றம் எனப்படுகிறது.

சீ-1, சீ-2 மற்றும் சீ-3 எனப் பெயரிடப்பட்டிருக்கும் மூன்று துண்டுகளைப் பெறுவதற்கான பேச்சுக்களில் ஈடுபடுவதற்காக ஓ.வி.எல் நிறுவனத்தின் பிரதிநிதிகள்இலங்கைக்கான பயணத்தினை மேற்கொள்ள இருக்கிறார்கள்.

இந்த இந்தியாவினது முன்னணி நிறுவனமானது இலங்கையில் மேற்கொள்ளும் முதலாவது முதலீடாக இது அமையும். இலங்கையினது வடகடற்பிராந்தியத்தில் எண்ணைப் படிவுகள் காணப்படும் துண்டுகளை நியமன அடிப்படையில் பெறுவதற்கு இந்திய அரசாங்கத்தின் முழுமையான ஆதரவுடன் இந்தியாவின் எண்ணை மற்றும் இயற்கை எரிவாயு கூட்டுத்தாபனத்தின் வெளிநாட்டுக் கிளை [Oil and Natural Gas Corp. Ltd -ONGC] தொடரான முயற்சிகளை மேற்கொண்டிருந்தது.

"காவேரி மற்றும் மன்னார் கடற்தட்டுக்களை பெறும் முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருந்தோம். இதற்கமைய இலங்கை அரசாங்கத்திடம் எங்களின் முன்மொழிவுகளை முன்வைத்திருந்தோம். நியமன அடிப்படையில் இந்தத் துண்டுகள் எங்களுக்கு வழங்க வேண்டும் எனக் கோரியிருந்தோம்" என அந்த நிறுவனத்தினைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

"எங்களது இந்த முயற்சிக்கு இந்திய அரசாங்கமும் ஆதரவு தந்துநிற்கும் நிலையில் இலங்கை இந்தத் துண்டுகளை எங்களுக்கு வழங்குவதற்கு விரும்பம் தெரிவித்திருக்கிறது. முதலில் ஒரு துண்டினை மாத்திரம் தருவதற்கு இலங்கை விரும்பியது. ஆனால் நாங்கள் அதனை ஏற்கவில்லை" என அவர் தொடர்ந்து தெரிவித்தார்.

இலங்கையில் சீனா அதிக செல்வாக்கினைச் செலுத்திவரும் இந்தக் காலப்பகுதியில் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் இலங்கையில் தொடர் தலையீட்டினை மேற்கொள்ளும் ஒரு முனைப்பாகவே இந்தியாவின் இந்தச் செயல் கருதப்படுகிறது.

இன்றைய நிலையில் இந்திய அரச நிறுவனமான ஓ.வி.எல் எண்ணை வளச் சொத்துக்களைத் தனதாக்கும் போட்டியில் சீனாவினது தேசிய பெற்றோலியக் கூட்டுத்தாபனம் [China National Petroleum Corp], சினொபெக் கூட்டுத்தாபனம் [Sinopec Corp] மற்றும் CNOOC உள்ளிட்ட நிறுவனங்களுடன் போட்டியிட்டு வருகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையினது பெற்றோலிய வள அபிவிருத்திச் செயலகத்துடன் இந்த விடயம் தொடர்பாக ஓ.வி.எல் நிறுவனம் முன்னர் தொடர்புகொண்டிருந்தது. இந்தியாவினது முன்னாள் பெற்றோலியத் துறை அமைச்சர் முரளி டேறாவிற்கும் இலங்கையினது பெற்றோலிய வளத் துறை அமைச்சர் சுசில் பிறேமஜெயந்தவிற்கும் இடையில் கடந்த நவம்பரில் இடம்பெற்ற சந்திப்பினைத் தொடர்ந்து தான் குறிப்பிட்ட இந்தத் துண்டுகளை வழங்குவதற்கு இலங்கை முன்வந்திருக்கிறது.

இந்தச் சந்திப்பினைத் தொடர்ந்து கடந்த ஆண்டின் இறுதியில் கொழும்பில் இடம்பெற்ற இந்திய-சிறிலங்கா கூட்டு ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இதுவிடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. எண்ணைப் ப்டிமங்கள் இருப்பதாக நம்பப்படும் இலங்கையின் மன்னார் மற்றும் காவேரி கடற்படுக்கைகளில் எண்ணை மற்றும் எரிவாயு அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு இந்திய நிறுவனங்களுக்கு அழைப்பு விடுப்பதென்ற முடிவு இந்தக் கூட்டத் தொடரில் எட்டப்பட்டிருந்தது.

ஓ.வி.எல் நிறுவனத்திற்கு மூன்று துண்டுகள் வழங்கப்படவுள்ள இந்த விடயம் தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சக அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்த முடியவில்லை. இருப்பினும் ஓ.வி.எல் நிறுவனத்தினைச் சேர்ந்த தூதுக்குழு ஒன்று கூடியவிரைவில் கொழும்புக்குப் பயணிக்கிறது என்றும் இந்த நிறுவனத்திற்கு வழங்கப்படவுள்ள துண்டுகளை அவர்கள் சென்று பார்வையிடுவார்கள் என்றும் தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத அமைச்சினது அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார்.

குறிப்பிட்ட இந்தத் துண்டுகளைப் பெறுவதில் நாங்கள் ஆர்வத்துடன் இருக்கிறோம். இருப்பினும் இது தொடர்பான பேச்சுக்கள் ஆரம்பகட்டத்திலேயே இருக்கின்றன. கொழும்புக்குப் பயணம் செய்யவுள்ள ஓ.வி.ல் நிறுவனத்தின குழுவினது அறிக்கை கிடைக்கும் வரைக்கும் நாங்கள் காத்திருக்க வேண்டும் என அந்த அதிகாரி தொடர்ந்து தெரிவித்தார்.

குறிப்பிட்ட இந்த விடயம் இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனை நிலையிலேயே இன்னமும் இருக்கிறது என புதுடில்லியிலுள்ள சிறிலங்கா தூதரக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இலங்கை அரசாங்கத்துடனான எங்களது இராசதந்திர உறவுகள் வேகமாக வளர்ந்து வருகின்றன என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவில் இடையிடையே சங்கடமான நிலைமைகள் தோன்றுகின்ற போதும் இந்த உறவு பரஸ்பர நல்லெண்ணம் மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் கட்டப்பட்டிருக்கிறது. இருநாட்டு உறவில் இன்று எழுகின்ற பிரச்சினைகளுக்கு அப்பால் நீண்ட கால நலன்களிலேயே இரண்டு நாடுகளும் அதிக கவனம் செலுத்துகின்றன. இந்த நிலையில் எண்ணெய் அகழ்வுக்கான துண்டுகளை இந்தியா பெறுவது போன்ற பொருளாதார அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன என இந்திய வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளரான கிருஸ்ணா வி.ரஞ்சன் கூறுகிறார்.

ஓ.வி.எல் நிறுவனமானது நாளொன்றுக்கு ஒரு மில்லியன் பீப்பாய் மசகெண்ணை மற்றும் எரிவாயுவினை உற்பத்தி செய்கின்றது. அத்துடன் 14 நாடுகளில் நிலைகொண்டிருக்கும் இந்த நிறுவனம் 40க்கும் அதிகமான எண்ணை அகழ்வு மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை முன்னெடுத்திருக்கிறது.

இந்தியக் கடல் எல்லைக்குள் அமைந்திருக்கும் காவேரிப் படுக்கையில் எங்களது நிறுவனம் ஏற்கனவே எண்ணை அகழ்வாராய்ச்சிகளை மேற்கொணடதில் எமக்கிருக்கும் அனுபவத்தின் அடிப்படையில் இலங்கையினது கடல் எல்லைக்குள் வரும் மன்னார் மற்றும் காவேரிப் படுக்கைகளில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்வது இலகுவானதாக அமையும் என இந்த நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆர்.எஸ் புத்தல கடந்த டிசம்பர் 31ஆம் நாளன்று அமைச்சர் சுசில் பிறேமஜெயந்தவிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

தற்போது இந்தியாவிடம் கையிருப்பிலிருக்கும் மசகெண்ணையின் அளவினை நோக்குமிடத்து எதிர்காலத்தில் அதிகளவிலான எண்ணையினை அது பெறவேண்டிய கட்டாய தேவை இருக்கிறது. மசகெண்ணையினைப் பெறுவதற்காக இந்தியாவிடம் தற்போதிருக்கும் திட்டத்தின் அடிப்படையில் நோக்குமிடத்து 2030ம் ஆண்டு அது தனக்குத் தேவையான பெற்றோலியத்தில் 90 சதவீதமானதை வெளித் தரப்பிலிருந்து எதிர்பார்க்கவேண்டியிருக்கும்.

கடந்த ஏழு ஆண்டுகாலப் பகுதியினை நோக்குமிடத்து, பெற்றோலிய உற்பத்திகளை இந்தியர்கள் பயன்படுத்துவது வருடாந்தம் நான்கு சதவீதத்தினால் அதிகரிக்கிறது. 2012ம் ஆண்டளவில் இந்தியாவிலுள்ள நுகர்வோர் பயன்படுத்தும் எரிபொருட்களின் அளவு ஆண்டொன்றுக்கு 135 மில்லியன் தொன்களாக அதிகரிக்கும் என அனைத்துலக வலு நிறுவனம் [International Energy Agency] கூறுகிறது. தற்போது ஆண்டொன்றுக்கு 112 மில்லி யன் தொன் எரிபொருட்களை இந்தியர்கள் பயன்படுத்துகிறார்கள்.

# சாட்சியமளிக்க ஆர்வமில்லை நல்லிணக்க ஆணைக்குழு கவலை

## காலி - மாத்தறையில் கிடைத்தது ஏமாற்றம்



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கான விஜயத்தின் போது குறித்த பிரதேசங்களில் வாழும் எந்தவொரு தமிழ் பிரஜையும் சாட்சியமளிக்க முன்வரவில்லை என ஆணைக்குழுவின் தலைவர் சீ.ஆர்.டி.சில்வா தெரிவித்தார்.நல்லிணக்க ஆணைக்குழுவின் காலி மாவட்டத் திற்கான அமர்வின் போது ஒரு முஸ்லிம் சாட்சிய மளித்ததுடன் மற்றுமொரு முஸ்லிம் மகஜ ரொன்றை கையளித்தார்.

எனினும் மாத்தறை மாவட்டத்திற்கான விஜயத் தின் போது எந்தவொரு தமிழ் மற்றும் முஸ்லிம் பிரஜையும் சாட்சிமளிக்கவோ மகஜர் கையளிக் கவோ இல்லை.

நல்லிணக்க ஆணைக்குழு கடந்த 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாத்தறை மாவட்ட அமர்வை மாத்தறை மாவட்ட செயலகத்திலும் 19ஆம் திகதி சனிக்கிழமை காலி மாவட்ட அமர்வை காலி பழைய தேர்தல் செயலகத்திலும் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு முதலீடு இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தில் அதிக அளவில் நேரடி வெளிநாட்டு முதலீடு கிடைக்கும் என இலங்கை முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் 100 கோடி அமெரிக்க டொலர் பெறுமதி யான முதலீடுகள் நேரடியாக எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் ஜயம்பதி பண்டாரநாயக்க தெரிவித் துள்ளார்.

எதிர்வரும் மூன்று வருட காலப்பகுதியில், நான்கு முதல் ஐந்து சத வீதமான நேரடி முதலீட்டு நடவடிக்கைகளை அதிகரிக்க முதலீட்டுச் சபை விசேட திட்டங்களை அமுல்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, இந்த ஆண்டில், உல்லாசப்பயணத்திற்கு ஏற்ற சிறந்த இடங்களில் இலங்கையும் ஒன்று என லண்டனில் இருந்து வெளிவரும் இண்டிப்பெண்டன் செய்தித்தாள் கட்டுரை ஒன்றை வரைந்துள்ளது.

உலகின் 10 சிறந்த உல்லாசப் பயணிகளுக்கான இடங்களில் இலங்கையினையும் உள்ளடக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பதாகைகளுக்கு அனுமதி

(கொழும்பு)

உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் அரங்கு களுக்கு பதாகைகளை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை பொலிஸார் நீக்கியுள்ளனர்.

பொதுமக்கள் விடுத்த வேண்டுகோள்களைத் தொடர்ந்து கிரிக்கெட் வீரர்களை ஊக்குவிப்பதற்காக ரசிகர்கள் பதாகைகளை யும் அரங்குகளுக்கு எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, உலக கிண்ண போட்டிகள் நடைபெறும் அனைத்து அரங்குகளுக்கும் சிறிலங்கா கிரிக்கெட் இசை வழங்குவதால் ரசிகர்கள் அரங்குகளுக்கு இசைக்குழுக்களை அழைத்துச் செல்லவோ இசைக்கருவிகளை கொண்டு செல்லவோ தேவை யில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இசைக்கருவிகளை அரங்குகளுக்கு கொண்டுசெல்வதென்றால் சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் அனுமதியைப் பெற வேண்டும் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# நீரில் மூழ்கி கான்ஸ்டபிள் பலி

(மட்டக்களப்பு)

பட்டிப்பளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் குளத்தில் குளித்தபோது நீரில் மூழ்கி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை உயிரிழந்துள்ளார்.

ஜெயந்திபுரத்தைச் சேர்ந்தவரான ஜெயச்சந்திரன் பிரதீப் (வயது 21) என்ற பொலிஸ் கான்ஸ்டபிளே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவர்.

கடுக்காமுனை -வில்லுக்குளத்தில் சக பொலிஸ் உத்தியோகஸ்தர் களுடன் குளித்துக்கொண்டிருந்தபோது, மேற்படி பொலிஸ் கான்ஸ்டபிள் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக பட்டிப்பளை பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி பொலிஸ் கான்ஸ்டபிளின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக தற்போது வைக்கப்பட்டுள்ளது.

# புலமைப்பரீட்சையில் 114 மாணவர்களுக்கு தலா ஒரு புள்ளி மாத்திரமே கிடைத்தது



கடந்த தரம்-05 புல மைப் பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தா ளுக்கு 330 மாணவர்கள் தலா 0 புள்ளியை பெற்று இருக்கின்றனர்.

அதே போல இரண்டா வது வினாத்தாளுக்கு 320 மாணவர்கள் தலா 01 புள் ளியை பெற்று உள்ளனர். இரு வினாத்தாளுக்கும் 114 மாணவர்கள் தலா 01 புள்ளியைப் பெற்று இருக்கின்றார்கள்.

இவர்கள் 79 பேர் சிங்கள மொழிமூல பரீட்சார்த்திகள். ஏனையோர் தமிழ் மொழிமூல பரீட்சார்த்திகள்.

நாடு பூராவும் இருந்து 300,000 மாணவர்கள் இப்பரீட்சையை எழுதி இருந்தனர். இத்தகவல்களை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க வழங்கினார்.

## யுத்தத்தில்...

வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொழில்சார் நிபுணர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது தொழில்சார் நிபுணர்களின் முக்கிய கடமையாகும் என அவர் தெரிவித்துள்ளார். புலிகளை யுத்த ரீதியாக தோற்கடிக்க முடியாது என்ற வலுவான நிலைப்பாட்டை படையினர் தகர்த்தெறிந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து விட்டது. இனி நாட்டில் பிரச்சினை இல்லை என எவரும் நினைத்துவிடக் கூடாது எனவும், சர்வதேச ரீதியில் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். அரசாங்கம் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## - மக்களின் வயிற்றிலடிக்கும் கொள்ளையர் -

# முப்பது லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொருட்கள் கொள்ளை!

(கொழும்பு)

முப்பது லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவு நிவாரணப் பொருட்களை ஏற்றிச் சென்ற லொறியொன்றில் கொள்ளையிட்ட சந்தேக நபர்களை கல்கிசைப் பொலிஸார் கைது செய்துள் ளனர். அக்குரஸ்ஸ நோக்கிச் சென்ற லொறி யொன்றே கடத்தப்பட்டதாக பிரதி பொலிஸ் மா அதிபர் தயா சமரவீர தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை இரத்மலானை மெலிபன் சந்தியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சந்தேக நபர்களில் ஒருவர் தான் பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவைச் சேர்ந்தவரெனக் கூறிக்கொண்டு லொறியை சோதனையிட வேண்டும் எனக் கூறியபின்பே இந்த லொறி கடத்தப்பட்டிருந்தது.

ஏனைய சந்தேக நபர்களுடன் வெள்ளை வான் ஒன்று அங்கு வந்தது. லொறியின் சாரதி கடத்தப் பட்டார். பின்னர் பண்டாரகமவில் வைத்து மற் றொரு லொறியில் பொருட்கள் ஏற்றப்பட்டன.

லொறியின் உரிமையாளருடன் தொடர்புகொண்டு உரிய இடத்திற்குச் செல்ல தாமதம் ஏற்படும் எனக் கூறுமாறு சாரதி வற்புறுத்தப்பட்டார் என பிரதி பொலிஸ்மா அதிபர் கூறினார்

தொலைபேசி இலக்கங்கள் மூலம் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் களுத்துறை சிறையிலிருந்து தப்பி வந்த வர். மற்றொரு சந்தேக நபர் தேடப்படுகிறார் என வும் அவர் தெரிவித்தார்.

## பிரபாகரனின்...

அம்மாளின் மறைவையொட்டி பாதுகாப்புகளை இராணுவம் பலப்படுத்தியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பார்வதி அம்மாளின் மறைவையொட்டி புலம்பெயர் அமைப்புகளும், தமிழகத்தின் ஈழ ஆதரவு தலைவர்களும் தமது இரங்கலைத் தெரிவித்துள்ளனர். தமிழகத்தில் நினைவு வணக்க நிகழ்வுகளுக்கு ஏற்பாடாகி வருவதாக தெரிவிக் கப்படுகிறது. நேற்று எம்.ஜி.ஆர் நகரில் பெரியார் திராவிடர் கழகத்தின் ஏற்பாட்டில் அமைதி ஊர்வலம் இடம்பெற்று உள்ளது. இதே போன்று கோவை நகரிலும் சீமான் தலைமையில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்வதற்காக நாளை செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள் ளார்.

நேற்றுக் காலை, பார்வதி அம்மாள் காலமா னதை அவருக்கு சிகிச்சையளித்து வந்த வல்வெட் டித்துறை ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரி மயிலேறும் பெருமாளும் ஊடகங்களுக்கு உறுதிப்படுத்தினார்.

பார்வதி அம்மாளின் கணவர் திருவேங்கடம் வேலுப்பிள்ளை பனாகொடை இராணுவத் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த போது 2010 ஜனவரி யில் மரணமடைந்தார்.

திரு. வேலுப்பிள்ளையின் அவர்களின் மரணத் தையடுத்து விடுதலை செய்யப்பட்ட பார்வதி அம்மாள், மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்வ தற்காக மலேசியா செல்வதற்கு அனுமதிக்கப் பட்டார். இருந்த போதிலும் அங்கிருந்து தமிழகத் துக்கு மருத்துவ சிகிச்சைக்காக செல்ல முற்பட்ட போது விசா நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப் பட்டார்.

இதனையடுத்து அவரது சொந்த இடமான வல்வெட்டித்துறை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர் அங்கிருந்தே இறுதிவரையில் சிகிச்சை பெற்று வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

## வேட்புமனு...

வேட்புமனு நிராகரிப்பு தொடர்பில் வேட்பு மனுதாரர்கள் நீதிமன்றில் தாக்கல் செய்த மனு வினை கருத்திற்கொண்டே தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்க மேற்படி முடிவை எடுத்ததாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றில் மனுப்பரிசீலனை தொடர்ந்து வருவதால் 60 உள்ளூராட்சி மன்றங்களில் குறிப் பிட்ட திகதியில் தேர்தலை முன்னெடுக்க முடியாது என பிரதித் தேர்தல் ஆணையாளர் டபிள்யூ. பி.சுமனசிறி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மனு பரிசீலனை முடிவுற்றதன் பின் குறிப்பிட்ட உள்ளூராட்சிசபை களுக்கான தேர்தல் திகதி அறி விக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொன்சேகாவுக்கு...

பொன்சேகா அக்கட்சியில் இணைந்து கொள் வார் என பொன்சேகா சார்பாக பேச்சுவார்த்தை யில் ஈடுபட்ட தரப்பினர் தெரிவித்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது. எதிர்வரும் ஏப்பிரல் மாதம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை உட்பட உயர்நிலைப் பதவிகளில் மாற்றங்கள் இடம்பெற வுள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

இப்பேச்சுவார்த்தையின் போது பொன்சேகா தரப்பினர் நிபந்தனை ஒன்றை முன்வைத்திருப்ப தாகவும் அந்நிபந்தனைக்கு ஐ.தே.க உடன்படுமா யின் பொன்சேகா அக்கட்சியில் இணைந்து கொள்வது உறுதியாகும் என தெரிவிக்கப் படுகின்றது. இந்நிபந்தனை குறித்து இருதரப பினரும் கருத்து வெளியிடவில்லை.

இந்தப் பேச்சுவார்த்தையில் பொன்சேகா தரப்பில் அர்ஜுன ரணதுங்க மற்றும் சில உறுப் பினர்களும் ஐ.தே.கவில் ரணில் விக்கிரமசிங்க சார்பாக கரு ஜெயசூரிய, மங்கள சமரவீர உள்ளிட்டோரும் பங்குபற்றியிருப்பதாக தெரிய வருகின்றது.

அதேநேரம் ஏற்கனவே ஐக்கிய தேசியக்கட் சிக்குள் இருக்கும் மற்றொரு பிரிவினரான சஜித் பிரமதாஸ குழுவினர் பொன்சேகாவுடன் பேச்சு வார்த்தை நடத்தியிருந்த போதும் சஜித்தின் கோரிக்கையை பொன்சேகா நிராகரித்திருந்தார்.

இந்நிலையில் தற்போது ரணில் விக்கிரமசிங்க பிரிவினருடன் பேச்சுவார்த்தைகளை நடாத்த பொன்சேகா முன்வந்திருப்பதுடன் தற்போது இடம் பெற்றுவரும் பேச்சுவார்த்தையில் இதுவரை எந்த முடிவும் எட்டப்படவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

நூலகம்
துறைப் படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்



# அரசுக்கு எதிராக முறைப்பாடு; ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் மனு

## எதிர் நடவடிக்கை எடுக்க அரசு கடும் பிரயத்தனம்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் முறைப்பாடு செய்வதற்கு புலம்பெயர் தமிழர்கள் முயற்சித்து வருவதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கு முயற்சிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த முயற்சிக்கு சில ஐரோப்பிய நாடுகளின் அமைச்சர்களும் ஆதரவளித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பாவில் வாழும் ஒரு தொகுதி புலம்பெயர் தமிழ் மக்களே இந்த சூழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த சூழ்ச்சித் திட்டத்திற்கு ஆதரவு திரட்டும் நோக்கில் ஐரோப்பாவின் சில அமைச்சர்களுடன் புலம்பெயர் தமிழர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு அறிக்கையை பேரவை அமர்வுகளுக்கு முன்னர் வெளியிடச் செய்ய புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் முனைப்பு காட்டி வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

எவ்வாறெனினும், இந்த சூழ்ச்சித் திட்டங்களை அரசாங்கம் அறிந்து கொண்டுள்ளதாகவும் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

# மத்திய கிழக்கு ஆர்ப்பாட்டங்களில் இலங்கையர் பங்குபற்ற வேண்டாம்



(கொழும்பு)

மத்திய கிழக்கில் பணியாற்றும் இலங்கையர்கள் அங்கு நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் பங்குபற்ற வேண்டாம் என பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமால் பெரேரா கோரியுள்ளார்.

பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கையர்களின் பாதுகாப்பு குறித்து விசாரிக்குமாறு இலங்கைத் தூதரகங்களை வெளிவிவகார அமைச்சு கோரியுள்ளது.

மேற்படி ஆபத்தான நிலைமையில் இலங்கை சம்பந்தப்படுவதற்கு தயாரில்லாததால் அந்நாடுகளில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் எதிலும் பங்குபற்ற வேண்டாம் என இலங்கை மக்கள் கோரப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் நியோமால் பெரேரா தெரிவித்தார்.

பஹ்ரெய்ன், லிபியா ஆகிய நாடுகளில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் இலங்கையர் எவரும் காயமடையவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை பஹ்ரெய்னுக்கு தொழில்வாய்ப்புகளுக்காக இலங்கையர்களை அனுப்புவதை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

2009 ஆம் ஆண்டு நவம்பரில் 5929 இலங்கையர்கள் பஹ்ரெய்னுக்கு தொழில்வாய்ப்புக்காக சென்றிருந்தமை புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவந்துள்ளன. அதேவேளை லிபியாவுக்கு 161 இலங்கையரக்ள் சென்றிருந்தனர்.

## பட்டப் பகலில் ஆயுததாரிகள் கைவரிசை

# ஓட்டோவுக்குள் இருந்த இருவர் பலி காலியில் நடந்த அதிர்ச்சிச் சம்பவம்!

(கொழும்பு)

காலி மாவட்டத்தின் எல்பிட்டிய பிரதேசத்தில் நேற்று பட்டப் பகலில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இத்துப்பாக்கிச்சூட்டை நடத்தியிருந்தனர்.

ஓட்டோ ஒன்றுக்குள் இருந்த இருவரை நோக்கியே சுட்டு இருந்தனர்.

சுடப்பட்டவர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே இறந்து போனார். மற்றவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தபோது இடைவழியில் உயிரிழந்தார்.

# நோர்வே உயர்மட்ட குழு இலங்கைக்கு விஜயம்

## சமாதான பணிக்கல்ல; கட்டுமானப் பணிக்கு

(கொழும்பு)

நோவே மீன்பிடி மற்றும் மீன்பிடிப் படகு கட்டும் துறைகளைச் சேர்ந்த உயர்மட்ட குழுவொன்று இலங்கை வரவுள்ளனது.

இலங்கை வரும் 8 உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழுவினர், இலங்கையில் இந்தத் துறை தொடர்பான வர்த்தக சமூகத்தைச் சேர்ந்தவர்களைச் சந்தித்து வர்த்தக தொடர்பை மேலும் வலுவாக்குவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வே மற்றும் இலங்கை வர்த்தகர்களுக்கு இடையேயான சந்திப்பொன்றை எதிர்வரும் 23 ஆம் திகதி நடத்துவதற்கான ஒழுங்குகளை இலங்கை வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய-இலங்கை பொருளாதார ஒப்பந்தம்; தேய்ந்துபோகுமா உள்ளூர் பொருளாதாரம்?

தொழிலதிபர்கள் மற்றும் உற்பத்தியாளர்களால் எழுப்பப்பட்ட அதிருப்தி காரணமாக 2008 இல் பிற்போட்ட "இந்திய - இலங்கை பொருளாதார கூட்டு உடன்படிக்கை" மீண்டும் நடைமுறைக்கு வரவுள்ளது.

இவ் உடன்படிக்கை இன்னமும் கைச்சாத்திடப்படாத போதும், படிப்படியாக அதனை நடைமுறைப்படுத்துவதென இரு தரப்பும் இணங்கியுள்ளன. உடன்படிக்கையை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக விவாதிப்பதற்கென 2010 இல் இரு நாடுகளின் பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழு நியமிக்கப்பட்டது.

முன்னைய "இந்திய-இலங்கை பொருளாதார உடன்படிக்கை யால்" இந்தியாவே பெரிதும் இலாபம் ஈட்டியதாகவும் இலங்கையின் பல தொழிற்சாலைகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இதனால் 50 வரையான இலங்கையின் தொழிற்சாலைகள் மூட வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும், 10000 வரையான தொழிலாளர்கள் தொழில்வாய்ப்புகளை இழந்ததாகவும் கூறப்படுகின்றது.

இதனாலேயே இந்திய - இலங்கை பொருளாதார உடன்படிக்கை தொடர்பான அதிருப்தி தொழிலதிபர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் மத்தியில் எழுந்தது.

இந்தியா தற்போது ஆண்டு தோறும் 2000 மில்லியன் டொலர்கள் பெறுமதியான பொருட்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்கின்றது. இலங்கையிலிருந்து 525 மில்லியன் டொலர்கள் பெறுமதியான பொருட்கள் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றது.

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான புதிய பொருளாதார உடன்படிக்கை கைச்சாத்திடப்படுமாயின், அதன் விளைவாக விமானப் பயணத்துறை, தொழில் வாய்ப்பு மற்றும் கட்டடத்துறை சார்ந்த துறைகளில் இலங்கை கணிசமான வருமானத்தை இழக்க நேரிடும் என பொருளியல் நிபுணர்கள் கருதுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கடற்கொள்ளையர்களிடம் சிக்கிய கடற்தொழிலாளர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

சோமாலிய கடற்கொள்ளையர்களால் பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்களில் மூவர் 17 நாட்கள் கடலில் கடும் சிரமங்களை எதிர்கொண்ட பின்னர் நேற்று முன்தினம் இலங்கைக்குத் திரும்பியுள்ளனர்.

மாத்தறை - மிரிஸ்ஸவிலிருந்து கடந்த ஜனவரி மாதம் புறப்பட்ட 5 மீனவர்கள் இலங்கையிலிருந்து 2000 கடல் மைல் தூரத்தில் சர்வதேச கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது சோமாலிய கடற்கொள்ளையர்களால் பிடிக்கப்பட்டனர்.

ஜனவரி 27 ஆம் திகதி அம்மீனவர்களில் இருவர் கடற்கொள்ளையர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஏனைய 3 மீனவர்களும் பெப்ரவரி 3 ஆம் திகதி விடுவிக்கப்பட்டனர்.

மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கூடிநின்று இம்மீனவர்களை வரவேற்றனர்.

நேற்று முன்தினம் இலங்கைக்குத் திரும்பிய அம்மீனவர்கள் கடற்கொள்ளையர்களால் படகில் விட்டுச் செல்லப்பட்ட வெற்றுத் தோட்டாக்கள் மற்றும் மின்குமிழ் விளக்கு (டோர்ச் லைட்) என்பவற்றை சட்ட நடவடிக்கைகளுக்கான ஆதாரமாக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அந்த மின்குமிழ் விளக்கில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் உருவப்படம் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குருநகர்...

நேற்றையதினம் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக கடற்தொழிலாளர்களது சங்கத் தலைவர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் தொலைபேசி மூலமாகத் தெரிவித்தார்.

அத்துடன் ராமேஸ்வரம் பகுதி கடல் எல்லைக்குள் தொழிலில் ஈடுபடக்கூடாது என்பது தொடர்பில் இன்று பேச்சுவார்த்தை நடத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

## காணி...

ஆகியோரின் விரல் அடையாளங்களை உறுதிகளில் பதிவு செய்யும் முறையை ஏற்படுத்தும் வகையில் புதிய சட்டம் வெகு விரைவில் கொண்டுவரப்பட உள்ளது.

உறுதிகளைத் தயார் செய்யும் சட்டத்தரணிகள் அவற்றின் பிரதி ஒவ்வொன்றை குறைந்தது நான்கு வருடங்களுக்கு பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என்றும் இப்புதிய சட்டத்தில் கொண்டு வரப்படவுள்ளது.

## பொலிஸ் அதிகாரி...

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, குறித்த தினத்திற்கு முன்தினம் இரவு வேளை தண்ணீர் எடுப்பதற்கு கிணற்றுப் பகுதிக்கு சென்று தண்ணீர் அள்ளிக்கொண்டிருந்த சமயம் தடக்கி குறித்த நபர் கிணற்றுக்குள் வீழ்ந்து இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த நாள் அதிகாலை பதில் பொறுப்பதிகாரி தண்ணீர் வரவில்லையே என கிணற்றைப் பார்த்தபொழுது குறித்த நபர் கிணற்றுக்குள் சடலமாக காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் இவரது சடலத்தை பிரேத பரிசோதனைக்காக அனுராதபுரம் வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (12)

## ஆஸி. நோக்கிய...

காலிக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர். இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி படகிலிருந்து உலர் உணவுப் பொருட்கள், தண்ணீர்ப் போத்தல்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

# பிரதம நீதியரசர் குழாம் மட்டக்களப்பு விஜயம்



(கொழும்பு)


நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதம நீதியரசர் அசோக்க டி.சில்வா உள்ளிட்ட குழுவினர் அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களுக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடி பிரதேசத்திற்கும் நேற்று விஜயம் செய்தனர்.

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதம நீதியரசர் அசோக்க டி.சில்வா ஆகியோர் பொத்துவில் பிரதேசத்தில் மாவட்ட நீதிமன்றக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டி வைத்ததுடன், கல்முனை நீதிமன்றக் கட்டிடத்தொகுதியில் சட்டத்தரணிகள் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்திலும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, சம்மாந்துறையில் நீதிவான் நீதிமன்றக் கட்டிடம் மற்றும் குவாசி நீதிமன்றக் கட்டிடம் என்பனவற்றினையும் இவர்கள் திறந்துவைத்தனர். கடந்த 25வருடங்களாக இயங்காமல் இருந்த களுவாஞ்சிகுடி சுற்றுலாத்துறை நீதிவான் நீதிமன்றம் இக்குழுவினரால் நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வுகளில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் எச்.எம்.எம்.ஹரீஸ், கல்முனை மாநகர முதல்வர் மசூர் மௌலானா உட்பட சட்டத்தரணிகள் பாதுகாப்பு படையினர் என பலர் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 பெப்ரவரி 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**கீழே தரப்பட்ட வரைபினை அவதானித்து 31 தொடக்கம் 35 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்குக. (மரக்கறிக் கடையொன்றில் அன்றைய தினம் விற்கப்பட்ட மரக்கறிகளின் விபரம் கீழே வரைபில் தரப்பட்டுள்ளது)**




31) கூடியளவு விற்கப்பட்ட மரக்கறி வகை எது?
1. வெண்டி 2. மிளகாய் 3. பயிற்றை

32) குறைந்தளவில் விற்கப்பட்ட மரக்கறி வகை எது?
1. தக்காளி 2. மிளகாய் 3. கத்தரி

33) 1 kg கத்தரிக்காயின் விலை ரூ.28 எனின் அன்றைய தினம் கத்தரிக்காய் விற்றுப் பெறப்பட்ட பணம் யாது?
1. ரூ.280 2. ரூ.75 3. ரூ.168


34) அன்றைய தினம் சமனாக விற்கப்பட்ட மரக்கறி வகைகள் யாவை?
1. தக்காளி, கத்தரி 2. தக்காளி, பயிற்றை 3. மிளகாய், வெண்டி

35) அன்றைய தினம் விற்கப்பட்ட கத்தரி, மிளகாய், வெண்டி ஆகியவற்றின் மொத்த நிறை யாது?
1. 18 kg 2. 15 kg 3. 12 kg

36) எருமை, பசு என்பவற்றின் பால் உறையும் போது கிடைப்பது?
1. மோர் 2. தயிர் 3. நெய்


37) கரப்பந்தாட்டம் ஒன்றின்போது ஓர் அணியில் இடம்பெறக்கூடிய விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை?
1. 12 2. 11 3. 17

38)





A,B ஆகிய இரண்டு தட்டிலும் உள்ள மெழுகுவர்த்திகள் ஒரே அளவானவை. இரண்டையும் ஒரே நேரத்தில் எரியச் செய்து இரண்டும் வெவ்வேறு அளவுடைய போத்தல்களினால் ஒரே நேரத்தில் மூடப்பட்டது. இதன்போது முதலில் அணைந்த மெழுகுதிரி எது?
1. A தட்டில் உள்ள மெழுகுதிரி
2. B தட்டில் உள்ள மெழுகுதிரி
3. A,B ஆகிய இரண்டு தட்டிலும் உள்ள மெழுகுதிரி ஒரே நேரத்தில் அணைந்தது.

39)




மேலே தரப்பட்ட உருக்கோலத்திற்கு ஏற்ப அடுத்துவர வேண்டிய உருக்கோலத்தைத் தெரிவு செய்து இலக்கத்தைக் கோட்டில் எழுதுக.




40) விதை பழத்திற்கு வெளியே அமைந்துள்ள தாவரம்?
1. தென்னை 2. மரமுந்திரிகை 3. அன்னாசி





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I
நேரம் -45 நிமிடம்


# கல்வி முரசு

வெளியீடு 02



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**கீழே தரப்பட்டுள்ள படத்தை அவதானித்து 01 தொடக்கம் 05 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.**



01) மரத்திற்கு தென்மேற்குத் திசையில் உள்ள பொருள் எது?
1. சிங்கம் 2. மேசை 3. மீன்


02) சிங்கத்திற்கு எதிர்த் திசையில் உள்ள பொருள் எது?
1. மேசை 2. மீன் 3. கிளி

03) ஈசான மூலைக்கும் அக்கினி மூலைக்கும் இடையே உள்ள பொருள் எது?
1. கணனி 2. வீடு 3. பூனை

04) வாயு மூலையில் உள்ள பொருள் எது?
1. கிளி 2. மேசை 3. சிங்கம்

05) மாணவன் மரத்தை நேராகப் பார்த்த வண்ணம் நிற்கின்றான் எனின் அவனின் வலது கைப்பக்கமாக உள்ளது எது?
1. மேசை 2. கிளி 3. பூனை

06.




200 மீற்றர் சுற்று வட்டத்தைக் கொண்ட நீள்வட்ட மைதானம் இதுவாகும். இதில் ஒரு கிலோ மீற்றர் தூரத்தை ஓடி முடிக்க வேண்டுமாயின் எத்தனை தடவைகள் இந்த மைதானத்தைச் சுற்றி ஓட வேண்டும்?
1. 5 2. 2 3. 3

07) அதிகளவு நீர் தேவையான தாவரம் எது?
1. நெல் 2. பனை 3. நிலக்கடலை


08) பொருத்தமான சொற்சோடியின் கீழ் கோடிடுக.

1. மா-கச்சல்    2. பலா-மூசு    3. வாழை-வடு

09) எனது நிறம் கருமை ஆனால், நான் இனிமையாகப் பாடுவேன். எனக்குக் கூடு கட்டத் தெரியாது நான் யார்?

1. காகம்    2. குயில்    3. செண்பகம்

10) பின்வரும் உருக்கோலத்திற்கு ஏற்ப அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.




**கீழேயுள்ள அட்டவணையில் 0 தொடக்கம் 9 வரையான ஒவ்வொரு இலக்கத்திற்கும் ஒவ்வொரு ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி கீழே கேட்கப்பட்டுள்ள 11 தொடக்கம் 13 வரையான வினாக்களுக்கு விடைதருக.**

| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| K | A | P | M | S | V | R | B | D | E |

1. ABK    2. APE    3. EPA


1. PAB    2. MVE    3. ABP

1. ADMV    2. VDAV    3. ADVM

14) இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?

1. மு.நல்லதம்பிப் புலவர்    2. ஆனந்தசமரக்கோன்    3. ஆறுமுகநாவலர்

15)



இக்குறியீட்டின் மூலம் காட்டப்படுவது எது?

1. இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
2. ஸ்ரீலங்கா ரெலிகொம்
3. இலங்கை தபால் சேவை

16) வாழைப் பூவை நாடிவரும் பிராணி எது?

1. வெளவால்    2. வண்ணத்துப்பூச்சி    3. அணில்

17 ஒருவருக்குத் தீ விபத்து ஏற்படும்போது அவ்விபத்துக்குள்ளானவர் உடனடியாகச் செய்ய வேண்டியது?

1. நீர் இருக்கும் இடத்தைத் தேடி ஓட வேண்டும்
2. நிலத்தில் படுத்து உருள வேண்டும்.
3. வேகமாக ஓட வேண்டும்.






18) குமாரின் வயது 15, கமல் குமாரிலும் 7 வயது மூத்தவன். ராஜா கமலிலும் பார்க்க 5 வயது இளையவன் எனின் ராஜாவின் வயது என்ன?

1. பத்து    2. பதினேழு    3. முப்பத்தி ஒன்பது

19) பேருந்து எரிபொருளாகப் பயன்படுவது.

1. டீசல்    2. மண்ணெண்ணெய்    3. பெற்றோல்


20




அருகே தரப்பட்ட முகவையானது 7 லீற்றர் நீரைக்கொள்ளக் கூடியது. இதனை முழுமையாக நிரப்ப இன்னும் தேவையான நீரின் அளவு யாது?

1. 7 L 800 ml    2. 6 L 200 ml    3. 5 L 200 ml

21)




பெட்டியினுள் தரப்பட்ட உருவில் A வட்டத்துக்கும் B வட்டத்திற்கும் பொதுவான இலக்கங்கள் யாவை?

1. 5,3    2. 4,2    3. 1,6

**கீழே தரப்பட்ட 22 தொடக்கம் 26 வரையிலான சொற் கூட்டங்களில் ஏனையவற்றில் இருந்து ஒரு சொல் மாத்திரம் வித்தியாசமானது. அச்சொல்லைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை இடுக.**

22) 1. பாடசாலை   2. மைதானம்   3. ஆசிரியர்   4. கடிதம்   (..............)

23) 1. பழம்   2. வேர்   3. காய்   4. பூச்சி   (..............)

24) 1. சதுரம்   2. வட்டம்   3. செவ்வகம்   4. முக்கோணம்   (..............)

25) 1. வானம்   2. நட்சத்திரம்   3. இரவு   4. சூரியன்   (..............)

26) 1. பூசணி   2. புடோல்   3. பாகல்   4. வெண்டி   (..............)

27) புகையின் போக்கைக் காட்டப் பயன்படும் இரேகை எது?

1. 
2. 
3. 

28) ஒரு பெட்டியில் 60 பழங்கள் இருந்தன. அதில் தோடம்பழங்களைப் போல் மூன்று மடங்கு மாம்பழங்களும், மாம்பழங்களைப்போல இரு மடங்கு அப்பிள் பழங்களும் இருந்தன எனில் பெட்டியில் இருந்த மாம்பழங்கள் எத்தனை?

1. 36    2. 18    3. 06

29) காகம் ஒன்று தனது அலகில் வடையுடன் அமர்ந்திருந்தது. அவ்வழியே வந்த நரி அதனைக் கண்டது. காகத்திடமிருந்து வடையை அபகரிக்க எண்ணியது. காக்கையாரே காக்கையாரே நீர் இனிமையாகப் பாடுவீர். ஒரு பாட்டுப்பாடு என்றது. காகம் வடையைத் தனது கால்களுக்கு இடையே வைத்தபடி கா கா என்று கரைந்தது. நரி வெட்கத்துடன் சென்றது. இக்கதையில் இருந்து புலப்படும் கருத்து யாது?

1. காகம் நரியைக் கண்டால் கரையும்
2. பிறரை வஞ்சிக்க நினைப்பவர்கள் தாமே ஏமாறுவார்கள்
3. நரிக்கு வடை என்றால் மிகவும் விருப்பம்

30) புனித வெள்ளரசு மரக்கிளை நாட்டப்பட்ட இடம்?

1. அனுராதபுரம்    2. பொலநறுவை    3. குருநாகல்